விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 09 வள்ளுவர் ஆண்டு 2039 பங்குனி 16 சனிக்கிழமை (29.03.2008) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 101




# சிங்கள அரசுகள் தொடுக்கும் அவலங்களே தமிழ் மக்களைப் போராடத் தூண்டுகின்றது

## அரசியல்துறைப் பொறுப்பாளர் நடேசன் பேட்டி



(கிளிநொச்சி)

**சிங்கள அரசுகள் தொடுக்கும் அவலங்கள்தான் தமிழ் மக்களை விடுதலையின் பாதையில் தொடர்ந்து போராடத் தூண்டுகின்றது என விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் தெரிவித்துள்ளார்.**

**தமிழ் நாட்டில் இருந்து வெளிவரும் குங்குமம் வார இதழுக்கு அவர் அளித்த நேர்காணலின் போதே இதனைத் தெரிவித்துள்ளார்.** (02ஆம் பக்கம் பார்க்க)

## மூன்று பிரிகேடியர்கள் மேஜர் ஜெனரலாக பதவியுயர்வு

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தின் மூன்று பிரிகேடியர்கள் மேஜர் ஜெனரல்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

மன்னார் கிழக்கில் மடு நோக்கிய இலக்கை வைத்து நடவடிக்கையில் உள்ள 57-வது டிவிசன் தளபதி பிரிகேடியர் ஜெகத் டயஸ், ஓமந்தையில் நிலைகொண்டுள்ள 56-வது டிவிசன் தளபதி பிரிகேடியர் ஜெகத் ரம்புக் கோத்த, படைத்துறைச் செயலாளர் பிரிகேடியர் தீபல் அல்விஸ் ஆகியோருக்கே மேஜர் ஜெனரல் நிலைகள் வழங்கப்பட்டுள்ளன. (ச-5)

## கிழக்கில் அதிரடிப்படையினரை விலக்கி வாக்குவேட்டைக்கு அரசு சதித்திட்டம்

### லக்ஸ்மன் கிரியெல்ல குற்றச்சாட்டு

(கொழும்பு)

கிழக்கிலிருந்து அதிரடிப்படையினரை விலக்கி அங்கு வாக்குவேட்டை நடத்துவதற்குரிய சதித்திட்டத்தை அரசாங்கம் மேற்கொண்டிருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியெல்ல குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

கிழக்கில் மாகாணசபைத் தேர்தல் நடைபெறவுள்ள நிலையில் அங்கு நிலைகொண்டிருந்த பாதுகாப்பு தரப்பினரை இடமாற்றம் செய்வது சந்தேகங்களைத் தோற்றுவித்திருக்கின்றது. இது குறித்து தேர்தல் ஆணையாளர் கவனம் செலுத்தவேண்டும்.

அரசாங்கத்தின் இந்த நடவடிக்கை 17-வது திருத்தச் சட்டத்தை மீறும் செயலாகும். கிழக்கில் இடம்பெறவிருக்கும் மாகாணசபைத் தேர்தலில் (10ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லீம் கட்சிகள் ஒன்றுபடாவிட்டால் தனியான சுயேட்சைக்குழு களத்தில்

### பள்ளிவாயில்கள் சம்மேளனம் தெரிவிப்பு

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் முஸ்லிம் கட்சிகளுக்கிடையே இணக்கப்பாடு ஏற்படாவிட்டால் அம்பாறை மாவட்டத்திலுள்ள சம்மாந்துறை பள்ளிவாயில் சம்மேளனம் தங்கள் சார்பில் ஒரு சுயேட்சைக் குழுவொன்றை தேர்தலில் நிறுத்தப்போவதாகக் கூறியுள்ளது.

பிரிபட்டுள்ள முஸ்லிம் சமூகத்தின் தலைவர்கள் ஒன்றிணைய வேண்டும்.

கிழக்கு மாகாணம் முஸ்லிம்களின் மாகாணம் என்பதை உறுதி செய்யவேண்டும் என சம்மாந்துறை பள்ளிவாயில் சம்மேளனம் கேட்டுள்ளது.

அதைவிடுத்து முஸ்லிம் தலைவர்கள் ஒன்றுபடாவிட்டால் தாம் சுயேட்சைக்குழுவை நிறுத்தப்போவதாகவும் பள்ளிவாயில் சம்மேளன செயலாளர் கூறியுள்ளார்.

தமது கோரிக்கைகளை மக்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்றும் அவர் கூறினார். (ச)

## வவுனியாவில் கைக்குண்டு வீச்சு

(வவுனியா)

வவுனியா மகாறம்பைக் குளத்தில் நேற்று முற்பகல் இடம்பெற்ற கைக்குண்டு வீச்சில் இரண்டுபெண்கள் படுகாயமடைந்துள்ளனர். மகாறம்பைக் குளத்திலுள்ள தனியார் தொலைத் தொடர்பு நிலையத்தின் மீதே இந்த கைக்குண்டு வீச்சு இடம்பெற்றது.

இதில் அந்த நிலையத்திலிருந்த இரண்டு பெண்களும் படுகாயமடைந்துள்ளனர். மகாறம்பைக்குளத்தைச் சேர்ந்த ராஜினி (வயது 30), யோகராணி (வயது 23) ஆகியோரே இதில் (10ஆம் பக்கம் பார்க்க)

## சர்வதேச நாடுகளின் மிரட்டல்களுக்கு அரசாங்கம் ஒருபோதும் அடிபணியாது

### அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் குறித்த சர்வதேச நாடுகளின் மிரட்டல்களுக்கு இலங்கை ஒருபோதும் அடிபணிய மாட்டாது என்று அமைச்சர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது, இலங்கையில் மனித உரிமை மீறல்கள் அதிகரித்திருப்பதாக காரணம் காட்டி சர்வதேசத்திலிருந்து இலங்கைக்கு கிடைக்கும் பல உதவிகளை தடுத்து நிறுத்துவதற்கு சில அமைப்புக்கள் முயற்சிக்கின்றன.

ஐரோப்பிய ஒன்றியத்துடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் எதிர்வரும் ஒக்டோபர் மாதத்துடன் நிறைவடைகிறது. இந்த ஒப்பந்தம் முன்னுரிமை அடிப்படையில் இலங்கைக்கு பொருட்களை வழங்குவதற்காக செய்யப்பட்டதாகும். (10ஆம் பக்கம் பார்க்க)



## சிறிலங்கா எயர் லைன்ஸின் பணிப்பாளர்கள் தெரிவு

(கொழும்பு)

சிறிலங்கா எயர் லைன்ஸின் புதிய தலைவராக டாக்டர் பி.வி.ஜெயசுந்தர அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார். பணிப்பாளர்களாக நிஷாந்த விக்கிரமசிங்க, லலித், டிசில்வா, சுனில் விஜயசிங்க ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

சிறிலங்கா எயர் லைன்ஸின் பங்குதாரர்களான அரசாங்கத்தின் பங்குகளில் 51.05 வீதமும் ஐக்கிய அரபு ராச்சியத்தின் பங்குகளில் 43.63 வீதமாகவும் காணப்படுகின்றன. திம்கிளார்க், கரிசப்மன், நிக்கில் கொட்பனிக்ஸ் ஆகியோர் பங்குகளுக்கு பொறுப்பாகவுள்ளனர். (ச-5)

## சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு கொழும்பில் பாதுகாப்புத் தீவிரம்

(கொழும்பு)

தமிழ் சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு கொழும்பில் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் தலைநகருக்குள் வருவது அதிகரிக்கத் தொடங்கியுள்ளதால் பாதுகாப்பை அதிகரிக்கவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முப்படையினரும் இணைந்து இப்பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.

கொழும்பில் இடம்பெறும் குண்டுவெடிப்பு சம்பவங்களினை அடுத்து இப்பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை தற்கொலை குண்டுதாரியாக நினைப்பவர்கள், மனதை மாற்றிக் கொண்டால் ரொக்கப்பணம் பரிசாகக் கிடைக்கும் என்று கூறும் புதிய சுவரொட்டிகள் தலைநகர் கொழும்பில் ஒட்டப்பட்டுள்ளமை குறித்து பொலிஸார் விசாரணை செய்து வருகின்றார்கள்.

கொழும்பில் தமிழர்கள் அதிகம் வாழும் ஒரு பகுதியில் இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. கரும்புலிகள் என்று சொல்லப்படுகின்ற விடுதலைப் (10ஆம் பக்கம் பார்க்க)

## சிங்களவர் இருவர் அம்பாறையில் சுட்டுக்கொலை

(அம்பாறை)

அம்பாறை மத்திய முகாம் அமைந்துள்ள பகுதியில் மண் அகழச் சென்ற சிங்களவர்கள் இருவர் நேற்றுமாலை ஆயுதம் தரித்த குழு ஒன்றினால் சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளனர். மற்றொருவர் படுகாயமடைந்துள்ளார்.

அம்பாறையில் மத்திய முகாம் அமைந்திருக்கும் 18-வது கொலனி பகுதியிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.

விடுதலைப் புலிகளே இவர்களை சுட்டுக் கொலைசெய் (10ஆம் பக்கம் பார்க்க)

# 13-வது திருத்தத்தை எதிர்க்கும் ஜே.வி.பி. மாகாண சபைகளில் அங்கம் வகிப்பதேன்?

## மேலக மக்கள் முன்னணி கேள்வி

13-வது திருத்தச் சட்டத்தினை ரத்துச் செய்யக் கோரும் ஜே.வி.பியின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் விமல் வீரவன்ச, அதன் விளைவாக மாகாண சபையில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி. உறுப்பினர்களை இராஜினாமா செய்யுமாறு கோருவாரா? என்று மேலக மக்கள் முன்னணியின் செயலாளர் நல்லையா குமரகுருபரன் கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்திய அரசாங்கத்தினால் பலாத்காரமாக திணிக்கப்பட்ட 13-வது திருத்தச் சட்டத்தினை இரத்துச் செய்ய வேண்டும் என விமல் வீரவன்ச கோரியுள்ளமை தொடர்பில் அறிக்கை ஒன்றினை விடுத்துள்ள குமரகுருபரன் அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கொசோவா தனிநாடாகப் பிரிவினைப் பிரகடனம் செய்வதற்கு முன்னிருந்த சேர்பியாவின் நிலை இலங்கையில் இருப்பதாக விமல் வீரவன்ச கூறியுள்ளார். இந்த நிலை இலங்கையில் நிலவுகிறது என்றால் இதற்கு ஜே.வி.பியும் அவர்களின் தயவில் உருவான அரசாங்கமுமே காரணமாகும் என்பதை விமல் வீரவன்ச புரிந்து கொள்ள வேண்டும்.

இத்தனை காலம் இந்த அரசினாலோ தென்னிலங்கையினாலோ ஏன் ஒரு மாற்று அதிகாரப் பரவலாக்கலுடன் கூடிய தீர்வுத் திட்டத்தை முன்வைக்க முடியவில்லை. சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தீர்வுத் திட்டவரைவு ஆக்க செயற்பாடு தள்ளிப் போனதற்கு ஜே.வி.பியும் காரணம் இல்லையா? ஜாதிக ஹெல உறுமய காரணம் ஆகாதா?

எந்தவொரு தீர்வுத் திட்டமும் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தில் ஜே.வி.பி., ஜாதிக ஹெல உறுமய இருக்கும் மட்டும் நிறைவேற்றப்பட முடியாதென்பதை அரசியல் யாப்பு அறிஞர் கலாநிதி ஜெயம்பதி விக்கிரமரட்ண தெளிவுபடக் கூறி அரசியல் அமைப்பு அமைச்சின் ஆலோசகர் பதவியிலிருந்து விலகிக் கொண்டது சில வாரங்களுக்கு முன்னர் நடைபெற்றுள்ளது.

13-வது திருத்தத்தை இரத்துச் செய்யக் கோரும் விமல் வீரவன்ச முதலில் 13-வது திருத்தத்தின் விளைவாக மாகாண சபையில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி. பிரதிநிதிகளை இராஜினாமா செய்து சுகபோகங்களைக் களைந்திடக் கோர வேண்டும்.

13-வது திருத்தம் தனிநாட்டைக் கொடுக்கும் என்றால் நாடு எப்போதோ பிரிந்திருக்கும். நோர்வேயின் நியாயமான பங்களிப்பை எதிர்த்து சமாதான முன்னெடுப்பில் இந்தியாவே பங்குகொள்ள சரியான நாடு என்று ஜே.வி.பியே முன்னர் கூறியது.

இன்று இந்தியா, இலங்கையின் வனங்களை விழுங்கப் 'பார்க்கின்றது என்று பல்டி அடிப்பது ஜே.வி.பியினதும் தேசப் பற்றுள்ள இயக்கத்தினதும் அதன் செயலாளர் விமல் வீரவன்சவினதும் அரசியல் கற்றுக்குட்டித்தனம் என்பதா? அரசியல் பாசாங்குத்தனம் என்பதா?

இந் நாட்டில் பிரிவினை ஒன்று ஏற்படுமானால் அதற்கு ஜே.வி.பியே காரணமாக அமையும். அதிகாரப் பரவலாக்கல் மூலமான அரசியல் தீர்வுக்கு ஜே.வி.பியின் ஒரே நிலைப்பாட்டைச் சர்வதேச சமுதாயத்திற்குப் பகிரங்கமாக அறிவிக்க வேண்டும் என்றார். (அ-5)

# இந்துக் கல்லூரிகளின் துடுப்பாட்டம் இன்று கோலாகலமாக ஆரம்பம்



கொக்குவில் இந்துக் கல்லூரி அணித் தலைவர் **இ. வாகீஷ்**

(யாழ்ப்பாணம்)

'இந்துக் கல்லூரிகளுக்கிடையிலான துடுப்பாட்டப் போர்' என வர்ணிக்கப்படும் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கும் இடையிலான துடுப்பாட்டப் போட்டி இன்று ஆரம்பமாகின்றது.

கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெறும் போட்டி இன்றும் நாளையும் நடைபெறும். இத் துடுப்பாட்டப் போட்டியின் ஆரம்ப நிகழ்வு இன்று காலை 9.30மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் அ.அகிலதாஸ் தலைமையில் நடைபெறும்.

அணித் தலைவர்களாகக் கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு இ.வாகீஷும், யாழ்.இந்துக் கல்லூரிக்கு தி.கௌசிகனும் தலைமை தாங்குகின்றனர். போட்டிகள் இரு தினங்களும் காலை 10 மணிக்கு ஆரம்பமாகின்றது.

இரு அணி வீரர்களும் இப் பருவ காலத்தில் சாதித்துள்ளமையினால் ஆட்டம் விறுவிறுப்பாக அமையும் என இரு பாடசாலை சமூகத்தினரும் தெரிவித்துள்ளனர். இதேவேளை இப் போட்டிக்குப் பிரதம விருந்தினராக செலிங்கோ இன்ஷூரன்ஸ் நிறுவனத்தின் பிராந்திய விற்பனை முகாமையாளர் பி.நந்திக்குமரனும் சிறப்பு விருந்தினராக ஈ.எஸ்.பி. நிறுவனத்தின் உரிமையாளர் எஸ்.பி.நாகரட்ணமும் கலந்து கொள்வர். (ச-5)



யாழ்.இந்துக் கல்லூரி அணித் தலைவர் **தி.கௌசிகன்**

# பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் ஐந்தாம் திகதி முற்பகல் 11 மணியளவில் தலைவர் மா.நாகலிங்கம் தலைமையில் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்து அங்கத்தவர்களையும் இக் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். (ச)

# சிங்கள அரசுகள் தொடுக்கும் அவலங்களே...

தமிழ்நாட்டு ஊடகமான குங்குமம் வார இதழுக்கு இணையம் வழி அவர் அளித்த நேர்காணலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

**சமாதான உடன்படிக்கையிலிருந்து இலங்கை அரசு விலகிய பிறகு ஈழத் தமிழர்களின் நிலை எப்படியிருக்கின்றது?**

கடந்த 25 ஆண்டுகளாகப் போருக்குள் வாழும் ஒரு வாழ்க்கையைத்தான் ஈழத் தமிழர்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இலங்கை அரசு தமிழ் மக்களுக்குக் கண்ணி வெடிகளையும் கண்ணீரையும் தான் இந்த 25ஆண்டுகளாகப் பரிசளித்து வருகின்றது.

சிங்கள அரசு தொடுக்கும் இந்த அவலங்கள்தான் தமிழ்மக்களை விடுதலையின் பாதையில் தொடர்ந்து போராடத் தூண்டுகின்றது. சுதந்திரத்திற்கான விலையாகவே இந்தக் கொடுமைகளைத் தமிழ்மக்கள் எதிர்கொண்டு வருகின்றார்கள்.

முன் எப்போதும் இல்லாத அளவுக்கு நீண்டதொரு அமைதி வாழ்க்கைக்குப் பிறகு ஈழ மக்கள் மீது கொடூரமான ஒரு போரைத் திணித்திருக்கின்றது -இலங்கை அரசு. மீண்டும் மீண்டும் அவர்கள் கறுப்பு வரலாற்றைக் கொண்டு வருகின்றார்கள்.

தினந்தோறும் வான் படைகள் மூலம் தமிழ்மக்களைக் குண்டு வீசி கொல்கிறது சிங்கள அரசு. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை ஈவிரக்கமில்லாமல் கொல்லப்படுகின்றார்கள். இலங்கை இராணுவத்தின் ஆக்கிரமிப்பில் வாழும் ஈழ மக்களின் நிலை இதை விட மோசமாகவுள்ளது.

இந்தச் செய்திகள் வெளியுலகிற்குத் தெரியாவண்ணம் மூடிமறைத்துப் பொய்ச் செய்திகளையே பரப்புகிறார்கள். அதுமட்டுமல்ல எந்த வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களையும் இலங்கை அரசு ஈழத்துக்குள் அனுமதிப்பதில்லை. ஈழ மக்களின் துன்பம் உலகுக்கும் தெரிவதில்லை. தமிழ்நாட்டுத் தமிழனுக்கும் தெரிவதில்லை.

**சமாதானப் பேச்சுவார்த்தையிலிருந்து நோர்வே விலகிச் சென்றது புலிகளுக்குப் பின்னடைவுதானே?**

இலங்கை அரசுக்கும் புலிகள் இயக்கத்துக்குமிடையிலான சர்வதேச ரீதியிலான பேச்சுவார்த்தைக்கு அனுசரணையாளராகச் செயற்படுமாறு இருதரப்பினாலும் அழைக்கப்பட்ட ஒரு நாடுதான் நோர்வே.

ஆனால் ஒருதலைப்பட்சமாக சிங்கள அரசு உடன்படிக்கையிலிருந்து விலகியதால் அனுசரணையாளரான நோர்வே அமைதி முயற்சிகளிலிருந்து விலகியிருக்க நிர்ப்பந்திக்கப்பட்டது.

எனவே நோர்வேயின் வெளியேற்றம் ஆனது சமாதான வழியில் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியும் என இந்த உலகத்தின் முன் நாடகமாடிக் கொண்டிருந்த சிங்கள அரசுக்குப் பின்னடைவே அன்றி புலிகள் இயக்கத்திற்கு எந்தப் பின்னடைவுமில்லை.

**ஈழத்தின் நான்கில் ஒரு பங்கு நிலத்தில் முழுமையாக விடுதலைப்புலிகளின் நீதி நிர்வாக ஆட்சி நடைபெற்று வந்த சூழலில் இப்போது அந்த இடங்களைக் கொஞ்சம் கொஞ்சமாக இலங்கை இராணுவம் கைப்பற்றி வருவதாகச் செய்திகள் வருகின்றதே?**

ஒருபோரில் தமது கட்டுப்பாட்டு நிலங்களை விட்டுப் பின்னகர்வதைத் தோல்வியாகவோ பின்னடைவாகவோ பார்க்கக் கூடாது. இது யுத்த தந்திரங்களுடன் கூடிய இராணுவ விவகாரம். எமது அமைப்பு விடுதலைப் போராட்டத்தின் நன்மை கருதி எங்கள் கட்டுப்பாட்டு நிலங்களிலிருந்து நாங்கள் பின்னகர்வதும் காலம் கனிந்து வரும்போது எதிரிகளிடமிருந்து எமது தாய்மண்ணை மீட்பதையும் புலிகளின் போரியல் வரலாற்றைக் கவனித்தவர்களுக்குப் புரியும்.

தமிழீழத்தின் தென்பகுதியிலிருந்து புலிகள் ஒரு பின்னகர்வைச் செய்தனர். இதனையே புலிகளின் தோல்வியாக உலகிற்குக் காட்டி வெற்றிப் பிரகடனம் செய்கிறது சிங்கள அரசு. அதே வெற்றிக் கனவுடன் வன்னிக்குள் போரைத் துவக்கிய சிங்கள அரசு இப்போது திணறிக் கொண்டிருக்கின்றது.

அங்குள்ள உண்மையான கள நிலைவரங்கள் வெளியுலகிற்குத் தெரியவதில்லை. வன்னிப் போரில் புலிகளிடம் தோற்றுப் போவோம் என்று அஞ்சித்தான் இந்தியாவிடமிருந்து ஆயுதங்களைப் பெற்று தமிழருக்கு எதிரான போரைத் தீவிரமாக்குகின்றது இலங்கை அரசு.

எப்போதெல்லாம் ஈழ மக்கள் மீது கொடூரமான போர் திணிக்கப்படுகிறதோ அப்போதெல்லாம் இந்திய அரசு கொடுக்கின்ற ஆயுதங்களை வைத்துத்தான் அங்கு தமிழ்மக்களைக் கொல்கிறது சிங்கள அரசு.

ஆனாலும் எமது தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களின் போரியல் தந்திரங்களோடு களமாடும் புலிகள் ஈழ மக்களுக்கு வெற்றியை ஈட்டிக் கொடுப்பார்கள்.

**புலிகளை வன்னிக்காட்டுக்குள் முடக்கி விட்டோம். இனி அவர்களை அழிப்பதில் எங்களுக்குச் சிரமம் இருக்காது என இலங்கை இராணுவத் தளபதி சரத் பொன்சேகா கூறியி ருக்கிறாரே?**

சிங்களப் படைத் தளபதி சரத் பொன்சேகா இப்படிக் கூறியிருப்பது இது முதன்முறையல்ல. மூன்றாவது முறை. மேலதிகமாக அவர் இன்னொன்றையும் கூறியிருக்கின்றார். வரும் செப்ரெம்பர் மாதத்திற்குள் புலிகளை அழித்து விடுவேன் என்றும் சொல்லியிருக்கின்றார்.

இவையெல்லாம் சரத் பொன்சேகாவால் நான்கு மாதங்களுக்கு முன்னர் வெளியிடப்பட்ட பிரகடனங்கள். ஆனால் இன்று அவர்கள் வெளியிட்ட பிரகடனங்களை அவர்களே மறுக்கின்றார்கள். காரணம் அவர்கள் தொடுத்த வன்னிப் போரில் பேரழிவைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள்.

அவர்களின் இந்த மறுதலிப்புகள்தான் வன்னிக்கள நிலைமையின் யதார்த்தத்தை உலகிற்குச் சொல்கின்றது.

**இலங்கை அரசின் தாக்குதலில் பிரபாகரன் காயமடைந்து பாதாள அறைக்குள் பதுங்கியிருப்பதாகவும் சர்க்கரை நோயினால் அவதிப்படும் அவரை வெளிநாடு கொண்டு செல்லத் திட்டமிட்டிருப்பதாகவும் செய்திகள். இன்னொரு பக்கம் புலிகளின் கடற்படைத் தளபதி சூசைக்கும் உளவுப் பிரிவுத் தலைவர் பொட்டம்மானுக்கும் பூசல் இருப்பதாகவும் அந்தப் பூசலின் விளைவே சமீபத்தைய பின்னடைவுகள் என்று சொல்லப்படுகின்றதே?**

தமிழக மக்கள் பழைய கதைகளை மறந்திருக்க மாட்டார்கள் என நினைக்கின்றேன். ஏற்கனவே பல முறை எமது தலைவர் தொடர்பான ஆசைகளை அவர்கள் வெளிப்படுத்தியிருக்கின்றார்கள். ஒருமுறையல்ல; பல முறை ஆழிப் பேரலை தென்கிழக்கு ஆசிய நாடுகளைத் தாக்கிய போதும் எமது தலைவர் மீதான ஆசையை அவர்கள் வெளிப்படுத்தினார்கள்.

அதுபோலவே இப்போதும் அவர்களின் ஆசைகளை வெளிப்படுத்துகிறார்கள். ஒவ்வொரு முறை எங்கள் மீதான பொய்ப்பிரசாரங்களைக் கட்டவிழ்த்துவிடும் போதும் காலம் அவர்களுக்குப் பதில் சொல்லியே வருகின்றது.

புதிய மொந்தையில் எத்தனை முறை ஊற்றினாலும் அவர்கள் பழைய கள்ளைத் தான் ஊற்றுகிறார்கள். சூசை பற்றியும் பொட்டம்மான் பற்றியும் கிளப்பி விடுகின்ற வதந்திகளும் அப்படித்தான். எமது தேசியத் தலைவரின் தலைமையின் கீழ் புலிகள் ஒன்றுபட்டுப் போராடிக் கொண்டிருக்கின்றார்கள்.

**இலங்கை இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவுக்கு இந்திய அரசு வரவேற்புக் கொடுப்பதும் இராணுவ உதவிகள் செய்வதும் இராணுவப் பயிற்சி கொடுப்பதும் ஒரு நாடு பக்கத்து நாட்டுக்குச் செய்யும் உதவியாகத் தானே எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்?**

பக்கத்து நாடு பாசிச நாடா? இல்லையா? என்பதையும், ஈழத்தில் தமிழ்மக்களையும் நாள்தோறும் சிங்களப் படைகள் கொல்கிறதா? இல்லையா? என்பதையும் பார்க்க வேண்டிய கடமை இந்தியாவுக்கு இருக்கிறதா? இல்லையா?

இங்கு ஒன்றைக் குறிப்பிட விரும்புகின்றேன். தமிழ் மக்களின் மீதான இந்தப் போரில் சிங்களப் படைகள் பலவீனமடைந்து ஒடிந்து போயிருக்கும் சூழலில் இலங்கை இராணுவத் தளபதி சரத் பொன்சேகாவின் இந்திய விஜயமும் அவருக்கு டில்லியில் வழங்கப்பட்ட அரசு மரியாதையும் எங்களுக்கு பெருத்த சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

ஒவ்வொரு ஈழத் தமிழனையும் கொல்கின்ற சிங்களக் கொலை வெறியில் இந்திய அரசும் கை நனைக்கின்றதோ என நாங்கள் சந்தேகப்படுகின்றோம். ஏனென்றால் சரத் பொன்சேகா டில்லியில் இருந்தபோது இந்திய இராணுவ உயர் அதிகாரி ஒருவர்; சிங்களப் படைகள் யுத்தத்தில் சோர்வடைவதைத் தாம் விரும்பவில்லை என்று கூறியிருக்கின்றார்.

அதாவது இலங்கை இராணுவம் பலவீனமாவதை இந்தியா விரும்பவில்லை என்றிருக்கின்றார். இவைகளை எல்லாம் வைத்துப் பார்க்கும்போது இலங்கையின் அழிப்புப் போருக்கு இந்தியாவும் உறுதுணையாகவிருப்பதாகவே தோன்றுகின்றது.

**ராஜீவ் மரணத்துக்குப் பிறகு தமிழகத்தில் புலிகளுக்கு ஆதரவு இல்லையே? இது வருத்தமாக இல்லையா? இந்தியாவிடம் உங்கள் கோரிக்கை என்ன?**

தமிழ்மக்களிடம் எங்களுக்கு ஆதரவான போக்கு இல்லை என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. கொடூரமாக ஈழத் தமிழ்மக்கள் கொல்லப்படும் போதெல்லாம் அவர்கள் துடித்துப் போவதை இப்போதும் நாங்கள் உணர்கின்றோம்.

தமிழகத்தின் பெருவாரியான தமிழ்மக்கள், புலிகளின் ஈழப் போரை ஆதரிக்கிறார்கள். இந்நிலையில் இந்தியா எமது அமைப்பின் மீதான தடையை நீக்கி தமிழ் மக்களின் தன்னாட்சி உரிமையை அங்கீகரிக்க வேண்டும் என்பதுதான் எங்கள் கோரிக்கை.

**சமீபத்தில் ஐரோப்பிய நாடான கொசோவா தன்னிச்சையாகத் தனது சுதந்திரத்தைப் பிரகடனப்படுத்திக் கொண்டது போல நீங்களும் உங்களின் தனி ஈழத்தைப் பிரகடனப்படுத்துவீர்களா? அப்படி சுதந்திர அறிவிப்புச்செய்தால் அதற்கு சர்வதேச அங்கீகாரம் கிடைக்குமா?**

ஒவ்வொரு சுதந்திரப் போரும் தனது இராணுவ, அரசியல் புறச்சூழல்களில் தேவையின் நிமிர்த்தம் சுதந்திரப் பிரகடனத்தைச் செய்து கொள்கின்றது. எமது சுதந்திர ஈழத்தையும் அதற்கான காலம் கனியும்போது நாம் மேற்கொள்வோம்.

புதிய தேசங்களின் சுதந்திரப் பிரகடனங்களை அதனை உலக நாடுகள் அங்கீகரிப்பதையும் ஏற்றுக் கொள்வதையும் நாங்கள் கவனித்துக் கொண்டிருக்கின்றோம். சுதந்திரத்தை மதிக்கும் நாடுகளிலிருந்து அத்தகைய ஆதரவுக் கரங்கள் எமக்குக் கிடைக்கும் என்பதே எங்களின் அசைக்க முடியாத நம்பிக்கை என்றார் அவர். (ச-5)

# இன்று ஒரு தகவல்

## சிறை

"நான் அப்பாவை விட்டு எப்பொழுதும் பிரிய மாட் டேன். அவர் எங்கே இருக்கிறாரோ அங்கேதான் நானும் இருப்பேன்" என்றான் ஒருவன். "உனது அப்பா எங்கே இருக் கிறார்'' என்று கேட்டால் ''அவர் ஜெயிலில் இருக்கிறார்'' என்கிறான். ஜெயிலுக்குப் போனாலும் சேர்ந்தே போய் விட்டு வரும் அளவுக்கு அவர்களுக்குள் ஒரு பந்தம்.

இந்தக் காலத்திலே இவர்களெல்லாம் ஜெயிலுக்குப் போவதென்றால் ஏதோ மாமியார் வீட்டுக்குப் போய்விட்டு வருவது போல போய்வருகிறார்கள். ஆனால் ஒரு காலத் தில் ஜெயிலுக்குப் போவதென்றால் பயந்து நடுங்கியவர் களும் உண்டு. 1403 இல் இங்கிலாந்திலே சிறைச்சாலை ஏற்பட்டது. அது அரசாங்கத்தின் நேரடிநிர்வாகத்தில் இருந் தது. ஆனால் அதற்கு முன்பு 1-1 சங்ககாலத்திலேயே தமிழ் நாட்டில் சிறைச்சாலைகள் இருந்திருக்கின்றன. பண் டைய தமிழ் அரசர்கள் காலத்தில் சாதாரணசிறை, பாதாள சிறை என்றெல்லாம் சிறைச்சாலைகள் இருந்தன என் பதற்குச் சரித் திர ஆதாரங்கள் உண்டு.

கணைக்கால் இரும்பொறை என்ற பண்டைய தமிழ் அர சன் சிறையிலே அடைக்கப்பட்டிருந்த பொழுது தாகத்துக் குத் தண்ணீர் கேட்டு, காவலாளி அதைக் கொடுப்பதில் தாமதமேற்பட்டதால் அவமானம் தாங்காமல் ஒரு பாடலை எழுதி வைத்துவிட்டு (புறம் 74) தற்கொலை செய்து கொண்ட தாகக் குறிப்பு இருக்கிறது. "குணவாயில் கோட்டத்து சிறை வைத்தான்'' என்று சொல்வார்கள். அந்தக் குணவாயில் கோட்டம் கும்பகோணமாக, அல்லது திருச்சி மலைக் கோட் டையாக இருக்க வேண்டுமென்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள்.

சிறைச்சாலையிலே குற்றவாளிகளை மிகவும் கஷ்டப் படுத்துவார்கள். அதனாலே சிறைக்குப் போவதென்றால் எல்லாருக்கும் பயம்! அந்தப் பயம் இருந்தால்தான். மனி தன் தப்புச் செய்யமாட்டான் என்று நினைத்தார்கள். ஆனா லும் காலப் போக்கிலே குற்றம் குறைவதாகத் தெரியவில்லை. அதனாலே பெரிய குற்றங்களுக்கு மரணதண்டனையைக் கொண்டுவந்தார்கள்.

1550க்கு பின் இங்கிலாந்துலேயும் இன்னும் சில ஐரோப் பிய நாடுகளிலேயும் சிறைச்சாலைகளை நிறுவினார்கள். அதற்கெல்லாம் (Work house, House of Correction என்று பெயர். பிச்சைக்காரர்கள், கடன்காரர்கள், குடும் பத்தைத் தவிக்கவிட்டு ஓடியவர்கள், சும்மா திரிபவர்கள் ஆகியவர் களையெல்லாம் பிடித்து அடைத்து வைப்பது வழக்கம். ஆனால் பெரிய தப்பு செய்பவர்களுக்கு இது சரி யான இட மாக இல்லை. அதனாலே அவர்களுக்காக அதிக பாதுகாப் புடன் இருக்கிற மாதிரி "சிறைகள்'' கட்டினார்கள். எல்லா விதமான குற்றவாளிகளையும் ஒரே அறையிலே ஆடு, மாடுகளைப்போல அடைத்து வைத்தார்கள். அவர்களுக்கு வேலையும் கிடையாது. சரியான சாப்பாடும் கிடையாது.

18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலே தான் கைதிகள் எல்லாம் நல்ல முறையிலே நடத்தப்பட வேண்டும்; சிறை கள் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் இருக்க வேண்டும் என்ற குரல் எழுந்தது. காலப் போக்கிலே பலவிதமான சீர் திருத்தங்கள் செய்யப்பட்டன.

இப்பொழுது நிலைமை மாறிவிட்டது. இப்பொழுது கைதி களுக்கு வேலை கொடுக்கிறார்கள். படிக்கலாம், தொழிற் கல்வி கற்றுக்கொள்ளலாம், வைத்திய வசதி, பொழுது போக்குவசதிகள் எல்லாம் இருக்கிறது. சிறைச்சாலைகளை மேலும் சீர்திருத்த வேண்டுமென திட்டமிட்டிருக்கிறார்கள். இவையெல்லாம் எதற்காக? சிறைக்குப் போகிறவர்களை மனிதாபிமான அடிப்படையிலே சீர்திருத்த வேண்டும் என்பதற்காகத்தான்.

ரொம்பக் காலத்துக்கு முன் குற்றவாளிகளைப் பிடித்து முதலிலே ஜெயிலிலே அடைத்துவிடுவார்கள். வழக்கு விசா ரணைக்குவரும்வரை அவர்கள் அங்கேதான் இருக்க வேண் டும். தீர்ப்பு வழங்கப்பட்டவுடன் தான் தண்ட னையை நிறைவேற்றுவார்கள். தண்டனை என்றால் மரண தண்டனை-இன்றேல் கசையடி-சித்திரவதை-அப ராதம் என ஏதாவதாக இருக்கும்.

தண்டனைக்காக சிறையிலே அடைத்துவைக்கிற பழக் கம் அந்தக் காலத்தில் கிடையாது. ராஜா-ராணி காலத் திலே ஒரு ராணியை ஒருவன் கடத்திக்கொண்டு போய் விட் டான். உடனே ராஜாவிடம் ஓடிவந்து விஷயத் தைச் சொன் னார்கள். "கடத்திக்கொண்டு போனவன் எங்கே இருந்தா லும் உடனே கண்டு பிடித்து என் முன்னால் கொண்டு வந்து நிறுத்துங்கள்" என்று உத்தரவிட்டார் ராஜா.

"அவனை என்ன செய்யப்போகிறீர்கள்?" என்று கேட் டார் அமைச்சர். ''அவனுக்கு என்னுடைய பாராட்டையும் நன்றியையும் தெரிவிக்கப்போகிறேன்" என்றார் ராஜா.

தென்கச்சி கோ சுவாமிநாதன்

# மனித உரிமை மீறல்கள் மூலம் பொதுமக்கள் பாதிக்கப்படுவதை உன்னிப்பாக அவதானிக்கிறோம்

## சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச மனிதாபிமான சட்டங் களை மீறும் வகையிலான வன் முறைகள் மூலம் நாடு முழுவதும் பொதுமக்கள் பாதிக்கப்படுவதை உன்னிப்பாக அவதானித்து வருவ தாக செஞ்சிலுவை சர்வதேசக் குழு அறிவித்துள்ளது. இந்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பின ருடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட் டுள்ளதாக அந்தக் குழு வெளியிட் டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட் டுள்ளது.

உறவினர்கள் காணாமற்போதல் அல்லது கைது செய்யப்படுதல், கொலை செய்யப் படுதல் மற்றும் துன்புறுத்தப்படுதல் ஆகியவற் றுக்கு இலக்காவதாக குடும்பங் களிடம் இருந்து தொடர்ச்சியாக முறைப்பாடுகள் கிடைத்து வருகின் றன எனவும் அந்தக்குழு தெரிவிக் கின்றது.

அரசாங்க அதிகாரிகளினதும் விடுதலைப்புலிகளினதும் ஒத்து ழைப்புடன் 45 வெவ்வேறு தடுப்பு முகாம்களுக்கு 60 தடவைகள் விஜ யம் செய்து பாதுகாப்பு காரணங் களுக்காக தடுத்துவைக்கப்பட்டுள்ள சுமார் 520 பேருடன் கலந்துரை யாடி அவற்றை பதிவு செய்ததாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் தெரிவித்துள்ளது.

கட்டுப்பாடற்ற பிரதேசங்களில் வாழும் பொது மக்களுக்குத் தேவை யான மருந்து வகைகளையும் அத் தியாவசியமான பொருட்களையும் விலை கொடுத்து வாங்கக்கூடிய சூழ் நிலை இருக்க வேண்டும் எனவும் அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

எனவே கட்டுப்பாடற்ற பிரதேசங் களுக்கு பொருட்களை அனுப்பி வைக்க வேண்டும் எனவும் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

இதேவேளை மோதல்களினால் பிளவுபட்டுள்ளவர்களிடம் தகவல் களைப்பெற்று இலங்கை செஞ்சிலு வைச் சங்கத்தின் பங்களிப்புடன் தக வல்கள் பரிமாற்றப்பட்டதாக செஞ் சிலுவை சர்வதேச குழு வெளியிட் டுள்ள அறிக்கையில் மேலும் தெரி விக்கப்பட்டுள்ளது.

இதனைவிட நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் மனிதாபிமான பணி யில் ஈடுபட்டு மக்களின் தேவை களை நிறைவேற்றி வருவதாகவும் சர்வதேச மனிதாபிமான சட்டத்தை மதிக்க வேண்டும் என்பதை வலியு றுத்தி மாணவர்கள் உட்பட சமூகத் தலைவர்கள், அரச சார்பற்ற நிறுவ னப் பிரதிநிதிகள் ஆகியோருக்கு செயலமர்வுகள் நடத்தப்பட்டதாக வும் அந்த அறிக்கையில் குறிப் பிடப்பட்டுள்ளது. (அ-7)

# சர்வதேச சட்டவிதிகளுக்கு அமைவாக மனித உரிமைகள் பாதுகாப்பு ஏற்பாடுகள்

## உயர் நீதிமன்றம் அறிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச சட்ட விதிகளுக்குக் கட் டுப்படும் வகையில் மனித உரிமை களைப் பாதுகாப்பதற்கான ஏற்பாடு கள் நாட்டின் அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக உயர் நீதி மன்றம் அறிவித்துள்ளது. இது தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் அபிப்பிராயத்தை ஜனாதிபதி கோரி யிருந்ததாக அமைச்சரவை முடிவு களை வெளியிடும் செய்தியாளர் மாநாட்டின் போது அமைச்சர் பேரா சிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

இதற்குப் பதிலளிக்கும் வகை யில் உயர்நீதிமன்றம் குறிப்பிட்ட அறிவித்தலை வெளியிட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். இலங்கைக்கு எதிராக சர்வதேசம் செய்துவரும் பிரச் சாரங்களை அடுத்து உயர் நீதிமன் றத்தின் அபிப்பிராயத்தை ஜனாதிபதி கோரியிருந்ததாக அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதேவேளை குற்றம் சுமத்தப்பட் டுள்ளவர்களையும் சாட்சியாளர் களை யும் பாதுகாக்கும் பொருட்டு சமர்ப் பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத் திற்கு அமைச்சவை அங்கீகாரம் கிடைத்துள்ளது. இது தொடர்பான சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப் பிக்கப்படவுள்ளதாக அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் அனுர பிரிய தர்சனயாப்பா தெரிவித்துள்ளார். (அ-7)

# வலிப்பு நோய்க்கான நவீன மருத்துவமனை கொழும்பில்

(கொழும்பு)

வலிப்பு நோய்க்கான மிகப் பெரிய மருத்துவமனையொன்று தேசிய வைத்தியசாலையுடன் இணைந்த தாக நிர்மாணிக்கப்படவுள்ளதாக சுகாதரா அமைச்சு தெரிவித்துள்ளது.

புதிய மருத்துவமனை வலிப்பு நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளிக்கக் கூடிய சகல வசதி களையும் கொண்டதாக இருக்கும். இதன் நிர்மாணப் பணிகளுக்கு சவூதி அரேபிய அரசாங்கம் 217 கோடி ரூபாவை கடன் உதவியாக வழங்கவுள்ளது.

இதேவேளை, பெருந்தோட்ட மருத்துவமனைகளை அரசாங்கம் பொறுப்பேற்ற பின்னர் அந்தத் துறை சார்ந்த குடும்பநல உத்தியோகத் தர்களை மாகாண சேவைக்குள் உள்ளீர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளது.

இந்த உத்தியோகத்தர்கள் இதற்கு முன்னர் கம்பனி நிர்வாகத் தின் கீழ் வேலைசெய்து வந்தனர். புதிய நடைமுறையின் கீழ் குடும்ப நல உத்தியோகத்தர்களுக்குரிய சம் பளக் கொடுப்பனவுகள் மாகாண சபையினூடாக வழங்கப்படவுள் ளது எனவும் அமைச்சு மேலும் தெரி வித்துள்ளது. (அ-5)

# இராசிபலன்

29.03.2008
(பங்குனி 16, சனிக்கிழமை)
மூலம் முன்னிரவு 8.31 மணிவரை
ஸப்தமி பிற்பகல் 12.06 மணி வரை
இராகுகாலம் 09.13-10.43 மணிவரை
சுபநேரம்-03.13-04.43 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | பிரயாணம், வீண்பயம், புதிய திட்டமிடல், குடும்பக்கவலை. |
| இடபம் | ஆரோக்கியக்குறைவு, காரிய தடங்கல், திருடர்பயம். |
| மிதுனம் | உறவினர் வருகை, சௌபாக்கியம், நல்வரவேற்பு. |
| கடகம் | நண்பர்கள் சந்திப்பு, தடைப்பட்ட காரியம் கைகூடும், தனலாபம். |
| சிங்கம் | குடும்பக்கவலை, பணவிரயம், காரிய இடையூறு, சொத்துப்பிணக்கு. |
| கன்னி | தனவிரயம், தொழில்சிந்தை, முயற்சி தாமதம், வகனசுகம். |
| துலாம் | மனோதைரியம், காரிய நன்மை, பிரயாணநன்மை, உறவினர்உதவி. |
| விருச்சிகம் | அதிகசெலவு, வேலைச்சுமை, போசனசுகக்குறைவு, விவாதம். |
| தனுசு | புதிய முயற்சி, வெகுமானம், போசனசுகம், நண்பர்கள் சந்திப்பு. |
| மகரம் | காரிய அலைச்சல், மனஸ்தாபம், எதிர்பாராத நன்மை, சுபசெலவு. |
| கும்பம் | முயற்சி கைகூடும், புகழ், பொருள் சேர்க்கை, தேகநலன். |
| மீனம் | நண்பர்கள் உதவி, செய்தொழில் விருத்தி, விருந்துபசாரம். |

வளவன்

# யாழ்.இந்துவுக்கு பெருமைசேர்த்த பழைய மாணவர் கௌரவிப்பு நிகழ்வு



(கொழும்பு)

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக் குப் பெருமை தேடித்தந்த பழைய மாணவர்களை கௌரவிக்கும் நிகழ் வையும், வருடாந்த ஒன்று கூடலை யும் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளை நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிமுதல் கொழும்பு பம்பலப்பிட்டி, சரஸ்வதி மண்டபத் தில் நடத்துகின்றது.

அமைப்பின் தலைவரும் லயன்ஸ் கழகங்களின் ஆளுநரு மான எஸ்.இராகவன் தலைமை யில் நடைபெறும் இவ்விழாவில் ஐந்து மூத்த பிரமுகர்களுக்கு மகத் தான சேவை விருது வழங்கப்பட வுள்ளது.

கண் வைத்திய நிபுணர் சோமசுந் தரம் ஆனந்தராஜன், சமய, சமூகப் பணியாளர் வைத்தியலிங்கம் கைலா சபிள்ளை, முன்னாள் கிளிநொச்சி அரச அதிபர் திருநாவுக்கரசு இராச நாயகம், கல்லூரியின் முன்னாள் மூத்த ஆசிரியர் ரி.ஸ்ரீநிவாசன், கிழக்குப் பல்கலைக்கழக முன் னாள் துணை வேந்தர் சிவசுப்பிர மணியம் இரவீந்திரநாத் ஆகிய பழைய மாணவர்களே மகத்தான சேவைக்கான விருதைப் பெறுகின் றனர்.



இதேவேளை, 2005ஆம் ஆண்டு க.பொ.த.உயர்தரப் பரீட்சையில் கணிதப் பிரிவில் மூன்று பாடங் களிலும் 'ஏ' சித்தியோடு தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்ற கல்லூரி மாணவன் மயூரன் சிவப்பிரகாசம், அதே பரீட்சையில் உயிரியல் பிரி வில் மூன்று பாடங்களிலும் 'ஏ' சித் தியுடன் தேசிய மட்டத்தில் ஐந்தாம் இடமும் மாவட்ட மட்டத்தில் முதல் இடம்பெற்ற கல்லூரி மாணவன் எஸ்.சிவபாலன் ஆகியோருக்கும் இந்நிகழ்வில் விசேட விருதுகள் வழங்கப்படவிருக்கின்றன.

கல்லூரியின் பழைய மாண வன் அருணந்தி ஆரூரனின் இசைக் கச்சேரியும் இந்த ஒன்று கூடலில் முக்கிய நிகழ்வாக இடம்பெறவுள் ளது. (அ-5)

## திரைப்படக் காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருமுறைக் கலாமன்றத்தில் திரைப் படப் பிரிவின் ஏற்பாட்டில் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3மணிக்கு கலைத்தூது கலையகத்தில் எம்.ஜி.எம். நிறுவன வெளியீ டாக 1961 இல் வெளிவந்த ''கிங் ஒப் கிங்ஸ்'' (King of kings) என்ற ஆங்கில மொழித் திரைப்படம் காண்பிக்கப்படவுள்ளது.

இத் திரைப்படம் Samuel Bronston தயாரிப்பிலும் Nicholes Ray இன் இயக்கத்திலும் வெளிவந்த படமாகும். ஆர்வமுள்ளவர்கள் மன்ற அலுவலகத்தில் இலவச அனுமதிச் சிட்டைகளைப் பெற்று இத் திரைப்படத்தைப் பார்வையிடலாம். (அ)

## பண்டிதர் பரீட்சைகளுக்கான விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது

ஆரிய திராவிட பாஷா விருத்திச் சங்கம், பண்டிதர், பாலபண்டிதர், பிரவேச பண்டிதர் பரீட்சைகளுக்கான விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

விண்ணப்பங்கள் ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும், விண்ணப் பப்படிவங்களை கீழைத்தேயக் கல்விக் கல் லூரி, 223,கே.கே. எஸ்.வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் பெற்றுக்கொள்ளலாம் என்றும் மேற்படி சங்கச் செயலாளர் ம.அ. கடம்பேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஓ)

## ஒருநாள் குஞ்சு விற்பனை

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக் களத்தின் அச்சுவேலி பிராந்திய கோழிப் பண்ணையில் இயந்திரத்தின் மூலம் பொரிக்க வைக்கப்பட்ட ஒருநாள் குஞ்சு ஒன்று 100 ரூபா வீதம் விற்பனை செய்யப்படவுள்ளதால் பெற்றுக்கொள்ள விரும்பும் பண்ணையாளர்கள் தங்கள் பிரதேச கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கங்களில் பதிவுகளை மேற்கொண்டு பெற்றுக்கொள்ளுமாறு கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் (வடக்கு) டாக்டர் திருமதி வ.அமிர்தலிங்கம் அறிவித்துள்ளார். (ஓ)

## அஞ்சலி நிகழ்வு

ஆரிய திராவிட பாஷாபிவிருத்தி சங்கம், நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு 223, கே.கே.எஸ்.வீதி ,யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கீழைத்தேயக் கல்விக் கல்லூரி மண்டபத்தில், சங்கத்தின் மூத்த உறுப்பினர் பண்டிதர் க.சச்சிதானந்தனின் சேவைகளைநினைவு கூரும் வகையில் சங்கத் தலைவரும் வடமாகாண மேலதிக கல்விப் பணிப்பாளருமான வே.தி. செல்வரத்தினம் தலைமையில் அஞ்சலி நிகழ்ச்சிகளை நடாத்தவுள்ளதாக சங்கத்தின் செயலாளர் ம.அ.கடம்பேஸ்வரன் அறிவித்துள்ளார். (ஓ)

## பொதுக்கூட்டம் பிற்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ். தொல்புரம் விக்னேஸ்வர வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் 10ஆவது பொதுக்கூட்டம், 30 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை நடைபெறவிருந்தபோதிலும், சங்கத்தின் போஷகர் மு.நமசிவாயத்தின் மறைவினால் பிற்போடப்பட்டுள்ளதாகவும் பொதுக் கூட்டம் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப் படும் எனவும் செயலாளர் சி.சிவநாதன் அறிவித்துள்ளார். (அ-7)

## தும்பளை மேற்கு இளைஞர் கழக பொதுக்கூட்டம்

தும்பளை மேற்கு இளைஞர் கழகத்தின் பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2மணிக்கு தும்பளை J/404 கிராம சேவகர் அலுவலகத்தில் கிராமசேவகர் திருமதி சா.தியாகராஜா தலைமையில் இடம்பெறும்.

இக் கூட்டத்திற்கு பிரதம விருந்தினராக வடமராட்சி வடக்கு பிரதேச செயலக இளைஞர் சேவை அலுவலர் எஸ். கோகுலராஜன் வருகை தந்து ஆலோசனைகளையும் கருத்துக்களையும் தெரிவிக்கவுள்ளார்.

இதன்போது,

✦ தும்பளை மேற்கு இளைஞர் கழகத்தை தும்பளை இளைஞர் கழகம் என புனருத்தாரணம் செய்தல்

✦ J/404 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட 15-29 வயதுக்குட்பட்ட இளைஞர் யுவதிகளை கழகத்தில் இணைத்தல்.

✦ இளைஞர் கழக நிர்வாகசபையை தெரிவுசெய்தல்.

✦ தும்பளை இளைஞர் கழகத்தை தேசிய இளைஞர் பேரவையில் இணைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளல்.

✦ தேசிய இளைஞர் பேரவையின் பிரதேச மட்ட இளைஞர்கழக விளையாட்டு விழா பற்றி ஆராய்தல் ஆகிய செயற்பாடுகள் இடம் பெறும். J/404 கிராம அலுவலர் பிரிவுக்குட்பட்ட 15-29 வயதுக்கிடைப்பட்ட ஆண், பெண் இரு பாலாரையும் கலந்துகொள்ளுமாறு இளை ஞர் கழகத் தலைவர் தியாகராஜா கிருபாகரன் கேட்டுக்கொண்டுள்ளார். (அ-6)

**யாழ்.செய்திகள்**

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கான முகாமைத்துவப் பயிற்சி

யாழ்.லயன்ஸ் கழகம் ஒழுங்கு செய்துள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கான முகாமைத் துவப் பயிற்சியும், கருத்தரங்கும் 31 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல்11 மணி தொடக்கம் 5மணிவரை யாழ்.இந்துஆரம்ப பாடசாலையில் நடைபெறும்.

இந் நிகழ்வை முகாமைத்துவத் துறையில் சிறந்த நிபுணரான லயன் எஸ்.றவீந்திரா(வர்த்தக வங்கி முகாமையாளர் யாழ்ப்பாணம்) திறம்பட நடாத்தி வைப்பார். அத்தோடு திரையில் அதற்கான விளக்கப் படங்களும் காண்பிக் கப்படும்.

ஏற்கனவே இந்நிகழ்வில் பங்கு பெற 'SOND' நிறுவனத்தினூடாக 30ஆசிரியர்கள் பதிவு செய்துள்ளார்கள். பதிவு பெற்றவர்களைத் தவிர ஏனைய ஆர்வமுள்ள ஆசிரியர்களும் கலந்துகொள்ளலாம் என்றும் சகல யாழ். லயன்ஸ் கழக உறுப்பினர்களையும் கலந்து கொள்ளுமாறும் கழகத்தலைவர் ப.செந்தில் செல்வன் கேட்டுக்கொண்டுள்ளார். (அ)

## மீன் எழுச்சித் திட்டம் அறிமுக நிகழ்வு

யாழ்.மாவட்டத்தில் 2008 ஆம்ஆண்டு உலக வங்கியினது அனுசரணையுடன் ஆரம் பிக்கப்பட்டுள்ள மீன் எழுச்சித் திட்டம் தொடர்பான அறிமுக நிகழ்வு எதிர்வரும் 1ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பல் 10 மணிக்கு காரைநகர் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது. (அ-7)

## திறப்பு விழா

வல்வெட்டி அறவழி தொழில் பயிலகத்தின் திறப்பு விழா எதிர்வரும் 3ஆம் திகதி வியாழக் கிழமை காலை 10.30 மணிக்கு வல்வெட்டி வன்னிச்ச அம்மன் கோவிலடியில் அறவழிப் போராட்டக்குழுத் தலைவர் வி.ஸ்ரீசக்திவேல் ஜே.பி. தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், கௌரவ விருந்தினர்களாக கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவை கே.திருநீபன், வல்வெட்டித்துறை மக்கள் வங்கி முகாமையாளர் கிருஸ்ணானந்தன் சிறப்பு விருந்தினர்களாக வல்வெட்டித்துறை கிராமசேவையாளர் கே.பாலசிங்கம், கொற்றாவத்தை அ.மி.த.க.பாடசாலையின் அதிபர் திருமதி பா. வெற்றிவேலு ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். இவ்விழாவில் நன்றியுரையை அறவழி நிதித்துறை இயக்குநரும் ஆசிரியருமான க.செல்வஜோதி வழங்கவுள்ளார்.

இத்துடன் வல்வெட்டி அறவழி தொழில் பயிலகத்தில் கனேடிய உலகப் பல்கலைக்கழக சேவை நிறுவனத்தின் அனுசரணையுடன் 25 பயிலுநர்களுக்கான அலுமினியம் பொருத்துதல் ஏழு மாதப் பயிற்சிநெறியும் சம்பிரதாய பூர்வமாக ஆரம்பிக்கப்படவுள்ளது. (ஓ)

## படகு வெளியிணைப்பு இயந்திரம் திருத்துதல் பயிற்சி நெறி

யாழ்.மாவட்டத்தின் இளைஞர், யுவதிகளின் முன்னேற்றம் கருதி தொழிற்துறைத் திணைக் களத்தால், சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் ''படகு வெளியிணைப்பு இயந்திரம் திருத்துதல்'' பயிற்சிநெறி ஒன்று நடத்தப்பட உள்ளதால் இப் பயிற்சி நெறிக்கு விண்ணப் பிக்க விரும்புவோர் தங்கள் விண்ணப்பங் களை எதிர்வரும் 5ஆம் திகதி க்கு முன்னர் மாவட்ட அலுவலகம், தொழிற்துறைத் திணைக் களம், மாவட்ட செயலகம்,யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு மாவட்ட அலுவலர் ப.ராகவன் அறிவித்துள்ளார்.

இதற்கு விண்ணப்பிப்போர் ஆகக் குறைந்தது தரம்8 இல் தேர்ச்சி அடைந்திருப்பதுடன் 17 வயதுக்கும் 25 வயதுக்கும் இடைப்பட்டவராக இருக்கவேண்டும் எனவும் மாவட்ட அலுவலர் அறிவித்துள்ளார். (ஓ)

## நாட்டுக் கூத்துப் போட்டி

மாவட்ட கலாசாரப் பேரவையினால் நடாத்தப்படும் விசேட கூத்துப் போட்டி(திறந்த பிரிவு) நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப9 மணிக்கு யா/இந்துக்கல்லூரியில் நடைபெறவுள்ளன. இப் போட்டியாளர்கள் வருவதற்கான வாகனங்கள் மாவட்ட செயலகத்தால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. போட்டியில் பங்குபெறும் நாடக மன்றங்கள் மற்றும் குழுக்களின் விபரம் கீழ்வருமாறு,

திருவள்ளுவர் நாடகமன்றம் வேலணை, நேதாஜி நாடகமன்றம் வேலணை, ம.கணேசலிங்கம் குழுவினர் கரவெட்டி, பரமேஸ்வரன் குழுவினர் உடுவில், யா/சென்.ஜோசப் வித்தியாலயம் யாழ்ப்பாணம், யா/நாவாந்துறை றோ.க.வித்தியாலயம் யாழ்ப்பாணம், யா/கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயம் நல்லூர். (ஓ)

## இறுவட்டு வெளியீட்டு விழாவும் கௌரவிப்பு விழாவும்

(யாழ்ப்பாணம்)

உடற்பயிற்சிப் பேராசான் அம்பலவாணர் தம்பித்துரையால் பாடப்பட்ட ''பாலும் தெளி தேனும்'' திருமுறை இறுவட்டு வெளியீட்டு விழாவும் கௌரவிப்பு விழாவும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் சுன்னாகம் ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தான திருமண மண்டபத்தில் ஸ்ரீ கதிரமலைச் சிவன் தேவஸ்தான பிரதம குருக்கள் முத்தமிழ் குருமணி சிவஸ்ரீ நா.சர்வேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆசியுரையை பிரம்மஸ்ரீ ச.சண்முகானந்தக் குருக்களும், பிரம்மஸ்ரீ மு.நாகேந்திரசர்மாவும் வாழ்த்துரையை சிவத்திரு வ.குமாரசாமி ஐயா, கலாபூஷணம் சிவ. சண்முகவடிவேல், சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் ஆகியோரும் பாராட்டுரையை வலி. தெற்கு.பிரதேசசெயலர் செல்வி.மஞ்சுளா தேவி தனபாலன், கொக்குவில் இந்துக் கல்லூரி ஓய்வுபெற்ற அதிபர் பொ.கமலநாதன், சுன்னாகம் ப.நோ.கூ.சங்கத் தலைவர் சி.குமரவேல் ஆகியோரும், அறிமுகவுரையை சுன்னாகம் ப.நோ.கூ.ச.களஞ்சியப் பொறுப்பாளர் சி.பேரின்பநாயகமும் வெளியீட்டுரையை சிவஸ்ரீ சி.சிவசரவணபவனும் நயப்புரையை செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனும் நன்றியுரையை ஏழாலை அ.மி.த.க.பாடசாலை அதிபர் த.வாமதேவனும் வழங்கவுள்ளனர். (ஓ)

## இந்து தர்மாசிரியர் பரீட்சைக்கான கருத்தரங்கு

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக் களத்தினால் நடாத்தப்படும் இந்து தர்மாசிரியர் பரீட்சைக்கான கருத்தரங்கு இன்று சனிக் கிழமை காலை 8 மணிக்கு, வேலணை சரஸ்வதி மகாவித்தியாலயத்தில், அபிவிருத்தி உதவியாளர் சு.உதயபாலன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் ''வேதங்களும் ஆகமங்களும்'', ''பன்னிருதிருமுறைகள்'', ''சமய ஞானிகளும் சமயப் பெரியார்களும்'', ''சைவசமய வரலாறு'', ''கோயில்களும் கலைகளும்'' எனும் தலைப்புகளில் முறையேபு ஸ்ரீந்திரன், கந்தசத்திய தாசன், எஸ்.செல்வமனோகரன், ந.விஜயசுந்தரம், பி.சக்திவேல் ஆகியோர் விரிவுரை வழங்கவுள்ளனர். (ஓ)

## ஞானவேல் பிரதிஷ்டை கால்கோள் விழா

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு மலையடி ஐயனார் ஆலயத்தின் ஞானவேல் பிரதிஷ்டை கால்கோள் விழா இன்று சனிக்கிழமை ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் முத்தையா மகாலிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இவ்விழா காலை 6.30 மணிக்கு பொங்கலுடன் ஆரம்பமாகி 10 மணிக்கு கந்தபுராணம் உற்பத்திக் காண்டம் விடைபெறு படலம் ஆகியவற்றின் புராணபடனத்தை அகில இலங்கை திருமுறை மன்றத் தலைவர் பௌராண்கிர் பண்டிதர் வ. பேரின்பநாயகம், யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையப் பொறுப்பாளர் விநாசித்தம்பி முரளீதரன், ஆலய முகாமையாளரும் யாழ்ப்பாண விவாகப் பதிவாளருமான வி.ஆர்.கே.இரத்தினசபாபதி ஜே.பி.ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (அ-7)







அண்மையில் வட்டு. இந்துக் கல்லூரியில் நடைபெற்ற வலி.மேற்கு சங்கானை மத்தியஸ்தர் சபையின் இரண்டாம் ஆண்டு நிறைவு விழாவின் போது பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.அரசாங்க அதிபர் க.கணேஷ் உரையாற்றுவதையும், பாராட்டுப் பத்திரம் வழங்குவதையும் , விழாவில் கலந்துகொண்டவர்களில் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.

# மியன்மாரில் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கத்திடம் அதிகாரம் கையளிக்கப்படும்

## இராணுவ ஆட்சியாளர் வாக்குறுதி

மியன்மாரின் தலைநகரில் ஆயுதப் படையினின் தினத்தையொட்டி பல்லாயிரக் கணக்கான படையினர் கலந்துகொண்ட பாரிய அணிவகுப்பு இடம்பெற்றது.

பொதுநிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதை வழமையாக தவிர்த்து வரும் அந்நாட்டின் தலைவர் ஜெனரல் தான் ஷவே (75 வயது), இந்நிகழ்வில் கலந்துகொண்டமை குறிப்பிடத் தக்கது.

இந்நிகழ்வில் உரையாற்றிய இராணுவ ஆட்சியாளரான தான் ஷவே, 2010 ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தேர்தலுக்கு பிற்பாடு இராணுவமானது பொதுமக்களால் தெரிவு செய்யப்பட்ட அரசாங்கத்திடம் அதிகாரத்தை கையளிக்கும் என உறுதியளித்தார்.



மியன்மாரின் ஆளும் இராணுவ சபையின் அதிகாரத்துவம் பொருந்தியவராக விளங்கும் தான் ஷவேயின் உடல் ஆரோக்கியம் தொடர்பில் அண்மைக்காலமாக வதந்திகள் பரவிவருகின்ற நிலையில், அவர் இந் நிகழ்வில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. வழமையாக வன்மையான வார்த்தைப் பிரயோகங்களைக் கையாளும் தான் ஷவே, இம்முறை தனது 15 நிமிட உரையில் கடந்த வருடம் செப்டெம்பரில் அந்நாட்டு பௌத்தமத குருமார் தலைமையில் நடாத்தப்பட்ட அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் குறித்து எதுவித விமர்சனமும் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

படையினர் மக்களுடன் இணைந்து செயற்பட வேண்டும் எனவும் நாட்டின் ஸ்திரத்தன்மைக்கு குந்தகம் விளைவிக்க முயலும் உள்ளக மற்றும் வெளியக சக்திகளை ஒடுக்க வேண்டும் எனவும் அவர் அழைப்பு விடுத்தார்.(அ-5)

# உகண்டாவில் பஸ்விபத்து 40பேர் பலி

(கம்பாலா)

மேற்கு உகண்டாவில் நடந்த பஸ்விபத்தில் நான்கு குழந்தைகள் உட்பட 40பேர் பலியானார்கள். உகண்டாவின் மேற்கு பகுதியில் 209 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள கிங்கோ என்னும் இடத்தில் பேருந்து ஒன்று சென்று கொண்டிருந்தது.

அப்போது பேருந்தின் ஓட்டுநர் முன்னே சென்ற லொறியை முந்த முயற்சி செய்தபோது பேருந்தில் தீ பற்றிக் கொண்டதாகவும், அதனால் விபத்து ஏற்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விபத்தில் 40 பேர் சம்பவ இடத்திலேயே பலியானார்கள். மேலும், பலர் படுகாயமடைந்தனர். இந்த விபத்தில் 10 பேர் மட்டுமே சிறிய காயத்துடன் உயிர் தப்பினர். சம்பவஇடத்திற்கு விரைந்த பொலிஸார் விபத்தில் காயமுற்றவர்களை அருகில் உள்ள மருத்துவமனையில் அனுமதித்தனர். இதில் பலரது நிலைமை மோசமாக இருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (அ-5)

# ஈராக்கில் இராணுவம் - தீவிரவாதிகள் கடும் மோதல் -150பேர் பலி

## பல நகரங்களில் ஊரடங்கு உத்தரவு

(பக்தாத்)

ஈராக்கில் இராணுவத்துக்கும் தீவிரவாதிகளுக்கும் நடந்த கடும் சண்டையில் 150 பேர் பலியானார்கள். பக்தாத் உட்பட பல்வேறு நகரங்களில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஈராக்கில் ஷியா பிரிவு தீவிரவாதிகளுக்கும் பொலிஸாருக்கும் கடந்த 3 நாட்களாக கடும் துப்பாக்கி சண்டை நடைபெற்று வருகிறது. ஷியா பிரிவு தலைவர் முக்தாதாசதார் தலைமையில் ஷியா மெகதிப்படை என்ற புரட்சிப்படை இந்தத் தாக்குதலில் ஈடுபட்டு வருகிறது.

பஸ்ரா நகரில் தொடங்கிய இந்த சண்டை பக்தாத் உட்பட பல்வேறு நகரங்களுக்கும் பரவி வருகிறது. தெருக்களில் இராணுவத்திற்கும் தீவிரவாதிகளுக்கும் துப்பாக்கிச்சண்டை நடைபெற்று வருகிறது. உள் நாட்டு போர் ஏற்படும் சூழ் நிலையும் உரு வாகி உள்ளது.

கடந்த 3 நாட்களாகநடந்து வரும் சண்டையில்இதுவரை 150க்கும் மேற்பட்டவர்கள் பலியாகிவிட்டனர். பக்தாத் , பஸ்ரா உட்பட பல்வேறு நகரங்களில் ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பஸ்ரா நகரில் இருந்து பல்வேறு பகுதிகளுக்கு எண்ணெய் கொண்டு செல்லும் 2 முக்கிய எண்ணெய் குழாய்களை தீவிரவாதிகள் குண்டு வைத்து தகர்த்துவிட்டனர். இதனால் எண்ணெய் சப்ளை பாதிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# உலக தரிசனம்

# சனிக்கிரகத்தின் சந்திரனில் மனிதன் உயிர்வாழ முடியும்?

(வோஷிங்டன்)

சனிக்கிரகத்தின் சந்திரன்களில் ஒன்றில் மனிதன் உயிர் வாழ்வதற்கு தேவையான தண்ணீர் , வெப்பம் போன்ற மூலக்கூறுகள் இருப்பதைகாசினி விண்கலம் கண்டுபிடித்துள்ளது.

சனிக்கிரகம் பற்றி ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்காக காசினி என்ற விண்கலத்தை அமெரிக்கா அனுப்பியது. இந்த விண்கலம் சனிக்கிரகத்தை சுற்றி வந்து படம் எடுத்து அனுப்பி வருகிறது. சனிக்கிரகத்தின் சந்திரன்களில் ஒன்று என்செலாட்ஸ். இதை விண்கலம் காசினி கடந்த 12 ஆம் திகதி அதன் 50கி.மீ. தொலைவுக்குள் கடந்து சென்றது.

அப்போது அதிக அடர்த்தி உள்ள நீராவி இருப்பதை விண்கலம் கண்டுபிடித்தது. அதோடுஉயிரி வேதிப்பொருள் இருப்பதையும் விண் கலம் கண்டுபிடித்தது.

**பனித்துகள்கள்**

மனிதன் உயிர்வாழ்வதற்கு மிக அத்தியாவசிய தேவையான தண்ணீர் நீராவி வடிவத்தில் இருப்பது விஞ்ஞானிகளுக்கு நம்பிக்கையை தந்துள் ளது. இந்த சந்திரனில் மெதேன், கார்பன் டை ஒக்சைட், கார்பன் மோனொக்சைட் ஆகிய வையும் என்சொலாட்ஸ்சில் இருக்கிறது என்ப தை காசினி கண்டறிந்தது.

இந்த தகவலை டெக்சாஸ் மாநிலம் சான் அன்டோனியா நகரில் உள்ள தென்மேற்கு ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த ஹன்டர் வெய்ட் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகை யில், வால்நட்சத்திரத்தில் இருக்கக் கூடிய பனித் துகள்கள் தான் என்செலாட்ஸ்சிலும் உள்ளது என்றும் பூமியில் மனிதன் வாழ்வதற்கு ஆதார மாக உள்ள பொருட்கள் என்செலாட்ஸ்சிலும் உள்ளன என்று தெரிவித்தார். (அ-5)

# பாகிஸ்தானின் புதிய பிரதமர் ஐஸ்வர்யாராயின் ரசிகர்

(இஸ்லாமாபாத்)

பொலிவுட் நடிகை ஐஸ்வர்யா ராய் மற்றும் ஹிந்தித் திரை உலகின் இசை அரசி லதா மங்கேஷ்கரின் பரம ரசிகன் நான் என்கிறார். பாகிஸ்தானின் புதிய பிரதமர் யூசுப் ரஸா கிலானி.

நான் சிறையில் இருந்தபோது லதா மங்ஷேகரின் பாடல்களை விரும்பிக் கேட்டதுடன் ஐஸ்வர்யாராய் நடித்த எல்லாப் படங்களையும் எனது லாப்டாப்பில் பார்த்து விடுவேன் என தனியார் தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் அவர் கூறியுள்ளார்.

சூஃபி சாதுவின் பரம்பரையைச் சேர்ந்த 55 வயதான கிலானி தேசியப் பேரவையின் தலைவராக இருந்தபோது தனது பதவியைப் பயன்படுத்தி முறைகேடுகளில் ஈடுபட்டதாக 2001இல் கைது செய்யப்பட்டார்.

பாகிஸ்தான் மக்கள் கட்சியுடனான தொடர்பைத் துண்டித்துக் கொண்டால் சிறையிலிருந்து விடுவிக்கப்படலாம் என்ற முஷாரப்பின் ஆசை வார்த்தைக்கு மயங்காமல் சிறைத் தண்டனையையே தேர்ந்தெடுத்தவர் கிலானி என்பது குறிப்பிடத்தக்கது.

பொழுது போக்கு நிகழ்ச்சிகளுக்கு பஞ்சம் நிறைந்த பாகிஸ்தான் மக்களுக்கு புதிய பிரதமரின் பொலிவுட் மோகத்தால் ஹிந்தித் திரைப் படங்களைப் பார்க்கும் வாய்ப்பு அதிகரித்துள்ளது. (அ-5)

# குடிநீர் இல்லாததால் பெண் தர மறுப்பு 15 ஆண்டுகளாக திருமணங்கள் இல்லை

(அகமதாபாத்)

குஜராத் மாநிலத்தில் உள்ள ஒரு கிராமத்தில். 15 ஆண்டாக குடிநீர் இல்லாததால், பெண் தர மற்ற கிராமத்தினர் மறுத்து வருகின்றனர். இதனால்,25 வயது முதல், 40 வயதுள்ள ஆண்கள்,பிரம்மச்சாரியாக 'விரக்தி'யில் உள்ளனர்.

குஜராத் மாநிலம் அகமதாபாத்துக்கு அருகே உள்ளது சாய்லா கிராமம். இந்தக் கிராமத்தில் 15 ஆண்டாக குடிநீர்ப் பிரச்சினை தீராமல் உள்ளது. 5 கி.மீ. தூரம் சென்று தான் தண்ணீர் எடுத்து வரவேண்டும். இதனால், பக்கத்தில் உள்ள 75 கிராமங்களில் உள்ள குடும்பத்தினர், இந்தக் கிராமத்தினருக்கு பெண் தரமறுத்து வருகின்றனர். இதனால்,15 ஆண்டாக இந்தக் கிராமத்தில் திருமணங்களே நடக்கவில்லை. 25 வயது முதல், 40 வயதுள்ள ஆண்கள், நூற்றுக்கணக்கான பேர் திருமணம் செய்ய வழியில்லாமல் பிரமச்சாரியாகவே வாழ்ந்து வருகின்றனர். கிராமத்தில், பிராமணர் , படேல் ,ஜெயின் இனத்தைச்சேர்ந்தமக்கள் குடியிருக்கின்றனர். குடிநீர் பற்றாக்குறை தலைவிரித்தாடியதை அடுத்து, கிராமத்தை விட்டுவெளியேறுவோர் எண்ணிக்கை அதிகரித்தது. கிராமத்தில் சனத்தொகை 16 ஆயிரமாக இருந்தது. இப்போது 10 ஆயிரமாக குறைந்துவிட்டது. கிராமத்தில் குடிநீர்ப் பற்றாக்குறை ஏற்பட்டதும்,வசதி படைத்தவர்கள் வெளியேறிவிட்டனர். குடிநீர் இல்லாத கிராமத்தில் இருந்து வெளியேறி, வேறு கிராமத்தில் குடியேறினால், பெண் கொடுப்பதாக சொன்னதால் பிள்ளையைப் பெற்றவர்கள் வெளியேறி வருகின்றனர். ஆனால் கூலித் தொழில் செய்யும் குடும்பத்தினரால் வெளியேற முடியவில்லை. இது குறித்து பாதிக்கப்பட்ட ஆண்கள் கூறுகையில், "நாங்களும் எவ்வளவோ முயற்சி செய்து பார்த்துவிட்டோம். ஆனால், அரச அதிகாரிகள் எட்டிக்கூட பார்ப்பதில்லை. குடிநீர்ப் பிரச்சினையால், எங்களின் வாழ்க்கையே பறிபோய் விட்டது" என்று புலம்பினர்.

உள்ளூர் எம்.எல்.ஏ, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவர். 'நான் எதிர்க்கட்சியை சேர்ந்தவன் என்பதால் இந்தப் பிரச்சினையை சட்டசபையில் எழுப்பலாமே தவிர,என்னால் வேறு எதையும் செய்யமுடியாது' என்றார். நர்மதா அணை திட்டம் நிறைவேறும் போது, சியாலா கிராமத்தின் குடிநீர்ப்பிரச்சினை தீர்ந்துவிடும்என்று அரசு கூறியுள்ளது.அதனால், இன்னும் இரண்டாண்டு வரை இந்தக் கிராமத்து இளைஞர்களுக்கு திருமணம் நடப்பது கேள்விக்குறி தான். (ஓ-5)

# துப்பாக்கிச் சூட்டில் இருவர் பலி அமெரிக்க ஆஸ்பத்திரியில் சம்பவம்

(கொலம்பஸ்)

அமெரிக்காவில் பள்ளி, கல்லூரி மற்றும் அலுவலகம் ஆகியவற்றில் துப்பாக்கிச் சூடு சம்பவங்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

அமெரிக்காவில் வசிக்கும் இந்திய பேராசிரியர்,இந்திய மாணவர்கள் பலர் இந்த துப்பாக்கிச் சூடு சம்பவங்களில் பலியாகி இருக்கிறார்கள்.

இந்தநிலையில் அமெரிக்க ஆஸ்பத்திரியில் ஒரு வாலிபர் புகுந்து 2 பேரை சுட்டுக் கொன்றான்.ஜோர்ஜியா மாகாணத்தில் உள்ள ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் ஓய்வு எடுக்கும் அறைக்குள் புகுந்த அந்த வாலிபர் சரமாரியாக துப்பாக்கியால் சுட்டான். இதில் 2 பேர் குண்டு பாய்ந்து பலியானார்கள்.

அங்கிருந்து தப்பி ஓடிய அந்த வாலிபர் கார் நிறுத்துமிடத் துக்குச் சென்று மீண்டும் சுட்டான். அப்போது பாதுகாப்பு ஊழியர் அந்த வாலிபரை சுட்டார்.

இதில் குண்டு பாய்ந்து கீழே விழுந்த அந்த வாலிபர் ஆபத்தான நிலையில் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

அந்த ஆஸ்பத்திரியில் சிகிச்சைபெற்று வந்த அவனது தாயார் சில நாட்களுக்கு முன் இறந்துவிட்டதால் அந்த ஆத்திரத்தில் இந்த துப்பாக்கி சூட்டை அவன் நடத்தியதாகக் கூறப்படுகிறது. (அ-5)

# ஆசியாவில் காடுகள் அழிந்துவருவதால் இயற்கை சீற்றங்கள் ஏற்படும்

## ஐ.நா.எச்சரிக்கை

ஆசிய வட்டார நாடுகள் சிலவற்றில் கடல் அரிப்பு, வரட்சி,வெள்ளப்பெருக்கு ஆகியவற்றால் ஏற்படும் பிரச்சினைகளை காடுகள் அழிப்பு மேலும் மோசமாக்கியிருப்பதாக ஐக்கிய நாடுகள் சபையின் அறிக்கை ஒன்று குறிப்பிட்டுள்ளது.

ஆண்டுதோறும் 30ஆயிரம் சதுர கிலோ மீற்றர் அளவுள்ள காடுகளை ஆசிய நாடுகள் அழித்துவருவதாகவும் இந்த நிலைமை திருத்தப்பட வேண்டும் என்றும் ஐ.நா.மன்றத்தின் பொருளாதார சமூக ஆணையம் கேட்டிருக்கிறது.

அடுத்துவரும் தசாப்தங்களில் சுற்றாடல்



பேரழிவுகளினால் தமது இருப்பிடங்களை இழக்கப்போகும் சுற்றுச்சூழல் அகதிகளைக் கையாள்வது எப்படி என்று ஆசிய நாடுகளின் அரசுகள் திட்டங்களை உருவாக்குதல் அவசியம் என்றும் அந்த அறிக்கை குறிப்பிட்டுள்ளது.(அ-5)

# மாமரத்தைத் தாக்கும்

# மாமர இலைத் தத்தி (Mango hopper)

யாழ்ப்பாணத்தில் மட்டுமன்றி இலங்கை முழுவதும் பங்குனி மாதத்தை அண்டிய



காலப்பகுதியில் மாமர இலைகளில் கறுப்பு நிற சாயம் போன்ற பதார்த்தம் படர்ந்து காணப் படுவதை அவதானிக்கக் கூடியதாக வுள்ளது. இதற்குக் காரணம் மாமரத்தின் இளம் இலை களையும் பூந்துணரையும் தாக்கும் மாமர இலைத்தத்தி எனப்படும் ஒரு வகைப்பீடை யாகும்.

**பீடைத்தாக்கம்**

இம் மாமர இலைத்தத்தியானது (Amritodus Atkinsoni ) பூக் களைத் தாக்குவதால் அதிகளவு விளைச் சலைக்குறைக்கக் கூடிய தும், நாடு முழுவதும் பரவிக்காணப்படுவது மான பீடையாகியுள்ளது.

பெரும் எண்ணிக்கையான அணங்கும் மற் றும் நிறையுடலிகள் தாவரத்தின் இளம் இலை மற்றும் பூந்துணர் போன்ற பகுதிகளில் துவா ரங்களை ஏற்படுத்தி அவற்றின் சாறை உறிஞ்சுகின்றன. இதனால் மரத்தின் வீரியம் குன்றிப் போகிறது.

துவாரங்களை அதிகளவு ஏற்படுத்தி தொடர்ச்சியாக சாற்றினை வெளியேற்றுவ தால் பாதிக்கப்பட்ட பகுதி சுருளடைந்தும் காய்ந்தும் காணப்படும்.

இவை இனிப்பான ஒட்டுந்தன்மையுடைய பதார்த்தங்களை சுரப்பதன் மூலம் (Sooty Mould)(Maliola Mangiferae) எனப்படும் ஒரு வகைப்பூஞ்சணத்தின் வளர்ச்சியைத் தூண்டுகின்றது. இவையே இலையின்மேலே படர்ந்து காணப்படும் கறுப்பு நிற பதார்த்தத் துக்கு காரணமாகும். இப்பதார்த்தம் மிகக் கடு மையாக தாவரத்தின் ஒளித்தொகுப்பில் பாதிப்பை ஏற்படுத்துகிறது.

ஒட்டு மொத்தமாக இப்பீடைகள் பூந்துணர் கள் காய்வடைதல், குறைந் தளவு காய்கள் உருவாதல் மற்றும் இளம் பருவத்தில் காய்கள் உதிருதல் என்ப வற்றுக்கு காரணமாக அமை யும்.

குறைந்த எண் ணிக் கையான பீடைகள் பூந்து ணர் தோன்றும் வரை மரப் பட்டைகளில் மறைந்து வருடம் முழுவதும் காணப் பட்டா லும் மாசி- சித்திரை மற்றும் ஆனி- ஆவணி மாதங்களில் இவற்றின் எண் ணிக்கை அதி களவில் காணப்படும்.

அதிக ஈரப்பதனும் நிழல் தன்மையும் இவற்றின் பெருக்கத்தைத்தூண்டும் பொது வாக இவ்வாறான நிலைமை முதிர்ந்த நெருக் கமாக நாட்டப்பட்ட மாமரத்தோட்டங்களி லேயே காணப் படும்.

பெண் மாமர இலைத்தத்திகள் பூந்து ணர் களிலும் இளம் இலைகளிலும் மெல்லிய பிளவுகளை ஏற்படுத்தி அதனுள் முட்டைகளை இடுகின்றன. கோடை காலத்தில் இப்பீடையில் வாழ்க்கைக்காலம் சுமார் 2-3 வாரங்களாகும்.

**பீடைக்கட்டுப்பாடு**

a) இரசாயன பீடை கொல்லிப் பயன் பாடு

0.15 வீதம் Carboryl, 0.05 Methyl parathione போன்ற பீடை கொல்லிகள் பொது வாகப் பயன்படுத்தப்படுகிறது.

இப்பீடை நாசினி முதல் தடவை பூந் துணர் தோன்றும் பொழுதும் இரண்டாம் தடவை பூந்துணர் முழுப்பருமனை அடைந்த பின்பு ஆனால் பூக்கள் விரிவடைவதற்கு முன்பும் மூன்றாம் தடவை காய்கள் தோன் றத் தொடங்கும் போது விசிறப்படல் வேண்டும்.



யாழ்ப்பாணச் சூழலை பொறுத்தவரை இங்குள்ள மரங்கள் தோப்பாக அன்றி வீட்டுச் சூழலில் தனித்தனியாகவும் கிணறுகளுக்கு அருகாமையிலும் காணப்படுவதனால் இர சாயன பீடைகொல்லிப்பிரயோகம் இங்கு உசிதமானதல்ல.

**b) உயிரியல் கட்டுப்பாடு**

உயிரியல் கட்டுப்பாட்டுமுறைக்காக Beauvenia bassiana எனப்படும் ஒரு பூசண வகையும்,

Mallada boninensis, chrysopalacci perda போன்ற இரைகௌவிகளும் பயன் படுத்த முடியும். எவ்வாறெனினும் இவ் உயிரி ய்ல் கட்டுப்பாட்டு முறைப்பயன்பாடானது இங்கு வழமையானதல்ல.

**c. ஒருங்கிணைந்த பீடை முகாமைத் துவம்**

யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரையில் இவ் ஒருங்கிணைந்த பீடைக்கட்டுப்பாடே உகந்த முறையாகும். ஏனெனில் பீடை கொல் லிகளின் தொடர்ச்சியான பாவனையானது மகரந்த சேர்க்கைக்கு உதவும் பூச்சிகளையும் பீடைகளின் இயற்கை எதிரிகளையும் அழிக் கின்றன.

அத்துடன் பீடை கொல்லிகளுக்கு எதிர்ப்பு திறனை வளர்க்க காரணமாகிறது. அதுமட்டு மல்லாது இப்பீடை கொல்லிகளின் மிகுதியா னது உயிரிகளுக்கு பாதகமான விளைவை ஏற் படுத்தும் எனவே இவ் மாமர இலைத் தத் தியை கட்டுப்படுத்துவதற்கு மாமரங்களை நெருக்க மாக நாட்டுவதை தவிர்ப்பதுடன் கிளைகள் அடர்த்தியாக இல்லாமல் இருப் பதற்காக ஒழுங்கான முறையில் வருடாவரு டம் மார்கழி மாதத்தில் கிளைகளை கத்தரிக்க வேண்டும். அத்துடன் குப்பைகளை எரியூட்டி புகை யூட்டலும் செய்யலாம். மேலும் மாமரத் தின் அடிப்பகுதியில் நீர் தேங்கி ஈரலிப்பாக இருப்ப தனை தவிர்த்தல் வேண்டும்.

அதிக நைதரசன் பசளை இடுவதைத் தவிர்த்தல் வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் வருங்காலத்தில் இப்பீடையை ஒழித்து அதிகளவான மாம்பழ விளைச்சலை பெற முடியும்.



த.கஜந்தன்
தகவல் தொடர்பு மையம்
விவசாய பீடம்

# உணவுப் பொருட்களின் விலையேற்றத்தால் உலகம் பட்டினிச்சாவை எதிர்நோக்கியுள்ளது

உணவுப் பொருட்களின் விலையேற்றம் இன்று உலகம் எதிர்நோக்கியிருக்கும் பெரும் பிரச்சினைகளுள் ஒன்றாக மாறியிருக்கிறது. ஈக்குவடோரில் அரிசிச் சோறு உண்ணும் ஏழை விவசாயிகள் முதல் அருஞ்சுவை உண வுகளை வைனுடன் சேர்த்து உட்கொள்ளும் பிரெஞ்சு மக்கள் வரை உலகிலுள்ள அனைத்து நுகர்வோரும் இந்த விலையுயர் வுக்கு முகங் கொடுக்க வேண்டியிருக்கிறது.

வழமைக்கு மாறான காலநிலை, எண் ணெய் விலையின் வேகமான அதிகரிப்பு, குறைந்த அளவிலான உணவுப் பொருள் கையிருப்பு மற்றும் இந்தியாவிலும் சீனாவி லும் வளர்ந்துவரும் நுகர்வோரின் தேவைகள் என்பனவே இந்த விலையுயர்வுக்கு காரணம் என்கிறார்கள் பொருளியல் நிபுணர்கள்.

இந்நிலையில் உலகின் வறிய நாடுகள் பெரும் பட்டினிச் சாவு அபாயத்தை எதிர்நோக் கியுள்ளன.

எகிப்தில் ரொட்டிக்குப் பெரும் தட் டுப்பாடு நிலவுகிறது. ரொட்டியை வாங்குவதற்காக பேக்கரி வாசலில் காத்திருந்தவர்களி டையே ஏற்பட்ட மோதல்களில் நால்வர் கொல்லப் பட்டிருப்பது அங்கு நிலவும் பட்டினியைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

புர்கினா பர்சோ மற்றும் கம்ருன் ஆகிய நாடுகளிலும் இம்மாதம் உணவுக்கான கல வரங்கள் நடைபெற்றுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

உணவுப் பொருட்களின் விலையுயர்வுக்கு எதிராக இத்தாலியிலும் எதிர்ப்புக்கள் கிளம்பி யுள்ளன. ஹெய்ட்டியில் ரொட்டியின் விலை இரு மடங்காக அதிகரித்துள்ளது.

“ஏற்கனவே விற்ற பொருட்களின் விலை களின் அளவுக்கு தற்போதைய விலைவாசி கள் குறையும் என எதிர்பார்க்க முடியாது” என் கிறார் ஐ.நாவின் உலக உணவுத் திட்டம் மற் றும் விவசாய அமைப்பின் அதிகாரியான பொருளியலாளர் அப்துல்ரெசா அப்பாஸ்.

ஹெய்ட்டியின் தொழிலாளியான தெரி மில்லான் ‘‘பஸ்டா’’ எனும் உணவுப் பொரு ளின் விலை இரு மடங்காக அதிகரித்திருப் பதன் காரணமாக தனது மனைவிக்கும் 4 பிள்ளைகளுக்கும் அவற்றை வாங்கிக் கொடுக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக வும் சில தினங்களாக பஸ்டா வுக்குப் பதிலாக சோளத்தையே அவர்கள் உணவாக உட்கொள் வ தாகவும் குறிப்பிடுகிறார். மேலும் அவர்கள் அரைவயிற்றுடன்தான் காலத்தைக் கழிக் கிறார்கள் என்கிறார் அவர்.

பெற்றோலியப் பொருட்களின் விலை உயர்வினாலேயே அனைத்துப் பொருட் களின் விலைகளும் அதிகரித்திருக்கின்றன.

துரிதமாக வளர்ச்சிய டைந்து வரும் நாடு களான சீனாவிலும் இந்தி யாவிலும் இறைச்சி மற்றும் பாற்பொருட்களுக்கான தேவையில் ஏற்பட்ட அதிகரிப்பால் கால்நடைகளுக்கு வழங்கப்படும் தானியங்களின் விலைகளும் அதிகரித்துள்ளன.

அமெரிக்காவில் உணவுப் பொருட்களின் விலைகள் கடந்த ஆண்டில் 4 சதவீதத்தால் அதிகரித்துள்ளன. கடந்த டிசம்பரில் 37நாடு களில் உணவுப் பொருட்களின் விலையுயர் வால் பெரும் நெருக்கடி ஏற்பட்டது. இதில் 20 நாடுகள் விலைக்கட்டுப்பாட்டு விதிமுறை களைக் கூட அமுல்படுத்தின.

உலகில் 89 மில்லியன் மக்களுக்கு உண வுக்கான உதவிகளை வழங்குவதற்கு 500 மில்லியன் டொலர்கள் பற்றாக்குறையாக இருப்பதாக உலக் உணவுத் திட்டம் அறிவித் துள்ளது.

இதற்குப் பங்களிக்குமாறு உதவி வழங் கும் நாடுகளுக்கு உலக உணவுத்திட்டம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

எகிப்தில் ரொட்டியின் விலை 35 சதவீதத் தாலும், சமையல் எண்ணெயின் விலை 26 சதவீதத்தாலும் உயர்ந்துள்ளது. உணவுக் கான மானியங்களை நிறுத்தப் போவதாக அறிவித்துள்ள எகிப்திய அரசாங்கம் இதற்குப் பதிலாக பணக்கொடுப்பனவுகளை வழங்கப் போவதாகவும் கூறியுள்ளது.

சீனாவில் சராசரி வருமானம் அதிகரிப் பதன் காரணமாக அங்கு உணவுப் பொருட் களுக்கான தேவைகளும் அதிகரித்துள்ளன. பன்றி இறைச்சியை வழமையாக உட்கொள் ளும் சீனர்களுக்கு மாட்டிறைச்சி ஆடம்பர உணவுப் பொருளாக இருந்துவந்தது. சீனா வில் வருமானம் அதிகரித்துள்ள இன்றைய நிலையில் மத்திய தரவர்க்கத் தினரின் வீடு களில் வாராந்தம் சமைக்கப்படும் உணவுப் பொருளாக மாட்டிறைச்சி மாறியுள் ளது.

உணவுப் பொருட்களின் விலையுயர் வைத் தடுக்க சில நாடுகள் உணவுப் பொருட்களின் ஏற்றுமதிக்குத் தடை விதித்துள்ளன. கோதுமை மாவின் ஏற்றுமதிக்கு சீனா தடை விதித்துள் ளதால் இந்தோனேசியாவில் கோதுமை மாவின் விலை அதிகரித்திருக் கிறது.

உக்ரெயினும் ரஷ்யாவும் கூட கோதுமை மா ஏற்றுமதிக்குக் கட்டுப்பாடு விதித்துள் ளன. இவ்விரு நாடுகளிலிருந்தும் மாவை இறக்குமதி செய்யும் நாடுகள் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன. இந்நரடுகளில் மாவிலையும் அதிகரித்துள்ளன. இலங்கை யில் கூட பொருட்களின் விலை கள் என்றுமில் லாதவாறு உயர்ந்துள்ள நிலையில், கோதுமை மாவின் விலை மேலும் 10 ரூபாவினால் அதி கரிக்கப்படவுள்ளதாகவும் செய்திகள் வெளி யாகி யிருக்கின்றன. (அ-5)

# இலங்கை- ஜோர்தான் பிரதமர்கள் சந்திப்பு

மத்திய கிழக்கு நாடுகளுக்கு நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயமொன்றை மேற்கொ ண்டுள்ள இலங்கைப் பிரதமர் ரட்னசிறி விக் கிரமநாயக்க நேற்று முன்தினம் ஜோர்தான் பிரதமர் நாதிர் தஹாபியைச் சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தியதாக ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

இச்சந்திப்பின் போது ஊழியத் துறையில் இரு நாடுகளுக்குமிடையிலான கூட்டுறவை மேம்படுத்துவதற்கான வழிமுறைகள் குறித்து இருவரும் கலந்துரையாடியுள்ளனர்.

இரு நாடுகளுக்குமிடையேஊழியர்பரிமாற் றங்கள் தொடர்பாக 2006 இல் செய்துகொள் ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின் அடிப்படையில் இணக்கம் காணப்பட்ட நடை முறைகளின் அமுலாக்கத்தை பூர்த்தி செய்வ தற்கு இக்கலந்துரையாடலின் பின்னர் இரு பிரதமர்களும் உடன்பட்டுள்ளனர்.

ஊழியர் பரிமாற்றங்களில் இரு நாடு களும் எதிர்கொள்கின்ற பல்வேறு பட்ட பிரச்சினை களைக் கலந்துரையாடுவதற்கு கூட்டுக் குழு வொன்றை அமைத்துள்ளமைக்கு ஜோர்தான் பிரதமருக்கு பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க இதன்போது பாராட்டுத் தெரிவித்தார்.

ஜோர்தானில் இலங்கைப் பணிப் பெண் கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் பிரதமர் இங்கு சுட்டிக் காட்டியதாகவும் அச்செய் தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# விஸ்வரூபமெடுத்த வீரேந்திர சேவாக்

# முச்சதம் அடித்தார்; இந்தியா பதிலடி

(சென்னை)

சேவாக் அதிரடி முச்சதம் அடிக்க, இந்திய அணி முதலாவது இன்னிங்ஸில் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்ட நேர முடிபில் ஒரு விக்கெட்டை மாத்திரமிழந்து 468 ஓட்டங்களை எடுத்து தென்னாபிரிக்க அணிக்குப் பதிலடி கொடுத்தது.


இந்தியாவுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுகின்றது. இத் தொடரின் முதலாவது டெஸ்ட் கடந்த 26 ஆம் திகதி முதல் சென்னையில் நடைபெற்று வருகின்றது.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடி அதன் முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுக்களையுமிழந்து 540 ஓட்டங்களை எடுத்தது.

இதில் ஹசிம் அம்லா 159 ஓட்டங்களையும் நீல் மக்கன்சி 94 ஓட்டங்களையும் அணித் தலைவர் சிமித் 73, மார்க் பௌச்சர் 70 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்து வீச்சில் ஹர்பஜன் சிங் 5 விக்கெட்டுக்களையும் கும்ளே 2 விக்கெட்டுக்களையும் மற்றும் சிறிசாந் ,சேவாக் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் தனது முதலாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி நேற்று முன்தினம் இரண்டாம் நாள் ஆட்டநேர முடிபில் விக்கெட் இழப்பின்றி 82 ஓட்டங்களை எடுத்திருந்தது. இதில் சேவாக் 52 ஓட்டங்களுடனும் ஜாபர் 25 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

தொடர்ந்து நேற்று மூன்றாம் நாள் ஆட்டத்தில் ஆடிய இந்திய அணிக்கு முதல் விக்கெட் இணைப்பாட்டமாக சேவாக், ஜாபர் ஏற்படுத்தினர்.




முச்சதம் பெற்ற மகிழ்ச்சியில் சேவாக்

### சேவாக் சதம்

ஆரம்பம் முதலே சிறப்பாக ஆடிய சேவாக் 116 பந்துகளில், டெஸ்டில் தனது 14-வது சதத்தைப் பூர்த்தி செய்தார்.

### சிறப்பான முதல் விக்கெட் இணைப்பாட்டம்

முதலாவது விக்கெட்டுக்காக சேவாக், ஜாபர் ஜோடி 203 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பெற்றபோது ஜாபர் 73 ஓட்டங்களுடன் ஹரிசின் சுழலில் கலிஸிடம் பிடிகொடுத்து ஆட்டம் இழந்தார்.

### சேவாக் இரட்டைச் சதம்

அடுத்துக் களமிறங்கிய ராகுல் ராவிட் நிதானமான ஆட மறுமுனையில் வீரேந்திர சேவாக் 194 பந்துகளை மாத்திரம் எதிர்கொண்டு 32 பவுண்டரிகள்,2 சிக்சர்கள் அடங்கலாக 202 ஓட்டங்களை எடுத்து டெஸ்டில் தனது 4-வது இரட்டைச் சதத்தைக் கடந்தார்.

தொடர்ந்து அதிரடியாகச் சேவாக் ஆட இந்திய அணியின் ஓட்ட எண்ணிக்கை அதிகரித்தது. மறுமுனையில் ராகுல் ராவிட் நிதானமாக ஆடி நீண்ட இடைவெளிக்குப் பின் தனது அரைச் சதத்தைக் கடந்தார்.

### சேவாக் 300, புதிய சாதனை

ஆரம்பம் முதலே தென்னாபிரிக்கப் பந்து வீச்சாளர்களைத் துவம்சம் செய்து அதிரடியாக ஆடிய வீரேந்திர சேவாக் 278 பந்துகளை மாத்திரம் எதிர்கொண்டு 41 பவுண்டரிகள், 5 சிக்சர்கள் உட்பட 300 ஓட்டங்களைக் கடந்து டெஸ்ட் கிரிக்கெட்டில் 2-வது முச்சதம் அடித்து சாதனை படைத்தார்.


இதற்கு முன், முன்னாள் மேற்கிந்தியதீவுகள் வீரர் பிரையன் லாரா (400-ஆ.இ., 370) ஓட்டங்கள் எடுத்தும் மற்றும் முன்னாள் அவுஸ்திரேலிய வீரர் பிரட்மன் (334,304) ஓட்டங்களை எடுத்து டெஸ்டில் இரண்டு முறை முச்சதம் அடித்த வீரர்கள் என்ற சாதனையைப் படைத்திருந்தனர்.

அந்த சாதனைப் பட்டியலில் சேவாக் 3-வது வீரராக இணைந்துள்ளார். இறுதியில் நேற்றைய மூன்றாம் நாள் ஆட்டநேர முடிபில் இந்திய அணி அதன் முதலாவது இன்னிங்ஸில் ஒரு விக்கெட்டை மாத்திரமிழந்து 468 ஓட்டங்களை எடுத்திருந்தது.

இதில் சேவாக் 292 பந்துகளில் 41 பவுண்டரிகள், 5 சிக்சர்கள் உட்பட 309 ஓட்டங்களுடனும் ராவிட் 181 பந்துகளில் 8 பவுண்டரிகள் உட்பட 65 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமல் துடுப்பெடுத்தாடி வருகின்றனர். போட்டியின் 4 ஆம் நாள் ஆட்டம் இன்றாகும்.

### ராகுல் ராவிட் 10 ஆயிரம் கடப்பாரா?

இந்திய அணியின் முன்னாள் அணித் தலைவர் ராகுல் ராவிட் நேற்று ஆட்டமிழக்காமல் 65 ஓட்டங்களை எடுத்ததன் மூலம் டெஸ்டில் இதுவரை 9 ஆயிரத்து 985 ஓட்டங்களை எடுத்துள்ளார். இன்றைய ஆட்டத்தில் மேலதிகமாக 15 ஓட் டங்களை எடுப்பாராயின் டெஸ்டில் 10 ஆயி ரம் ஓட்டங்களைக் கடந்த 6-வது வீரர் ஆவார். இதற்கு முன் பிரையன் லாலா (மே.தீ.-11 ஆயிரத்து 953), சச்சின் டெண்டுல்கர் (இந்.-11 ஆயிரத்து 782), அலன்போடர் (ஆஸி.-11 ஆயிரத்து 174), ஸ்ரீவோ (ஆஸி.-10 ஆயி ரத்து 927) மற்றும் காவாஸ்கர் (இந்.-10 ஆயிரத்து 122) ஓட்டங்களையும் எடுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (5)



ஜாபர்



# நூறாவது போட்டியில் பெக்கம் ஏமாற்றம்

(பாரிஸ்)

மிகவும் எதிர்பார்க்கப்பட்ட தனது 100- வது போட்டியில் டேவிட் பெக்கம் ஏமாற்றினார். இவர் ஒரு கோல் கூட அடிக்காத நிலையில் இங்கிலாந்து அணி, பிரான்சிடம் 1-0 என்ற கணக்கில் தோல்வி அடைந்தது. இங்கிலாந்து கால்பந்து ரசிகர்களால் கடவுளாக போற்றப்படுவர் பெக்கம். இவர் அமெரிக்காவின் பிரபல லொஸ்ஏஞ்சல்ஸ் கேலச்சி கிளப் அணிக்காகவும் விளையாடி வருகிறார்.

இவர் இங்கிலாந்துக்காக 100ஆவது போட்டியில் விளையாடுவாரா என்ற சந்தேகம் இருந்தது. இந்நிலையில் கடந்த புதன்கிழமை பாரிசில் நடந்த இங்கிலாந்து-பிரான்ஸ் இடையிலான நட்பு கால்பந்து போட்டியில் வாய்ப்பு பெற்றார். இதன் மூலம் சர்பாபி சார்ல்டன், பாபி மூர், பில்லி ரைட், பீட்டர் ஷெல்டனுக்கு பின்னர் 100ஆவது போட்டியில் விளையாடும் 5-வது இங்கிலாந்து வீரர் என்ற பெருமை பெற்றார்.

இப் போட்டியின் 32-வது நிமிடத்தில் இங்கிலாந்தின் டேவிட் ஜேம்ஸ், பிரான்சின் நிகோலஸ் அனல்காவை முரட்டுத்தனமாக கீழே தள்ளினார். இதையடுத்து பெனால்டி கிக் தரப்பட்டது இதில் பிராங்ரிபரி அருமையாக கோல் அடிக்க பிரான்ஸ் 1-0 என்ற முன்னிலை பெற்றது. இதற்கு இங்கிலாந்து



வீரர்கள்ால் பதிலடிகொடுக்க முடியவில்லை. பிரான்ஸ் வீரர் ரிபரியின் சட்டையை பிடித்து இழுத்ததற்காக மஞ்சள் அட்டை பெற்றார் பெக்கம். ஆட்டம் முடிய 18 நிமிடங்கள் இருக்கும் போது இவருக்கு பதிலாக டேவிட் பென்ட்லி களமிறக்கப்பட்டார். இதற்கும் பலன் கிடைக்காத நிலையில் இங்கிலாந்து தோல்வியை சந்தித்தது. (5)

# இரண்டாவது டெஸ்டில் ஆடுவேன்-இஷாந்த் சர்மா

(புதுடில்லி)

அவுஸ்திரேலிய சுற்றுப்பயணத்தில் கலக்கியவர் வேகப்பந்து வீச்சாளர் இஷாந்த் சர்மா காயம் காரணமாக உடல் தகுதி பெறாததால்



தென்னாபிரிக்காவுக்கு எதிராக சென்னையில் நடைபெற்றுவரும் முதல் டெஸ்டில் விளையாடவில்லை.

சேப்பாக்கம், துடுப்பாட்ட வீரர்களுக்கு சாதகமாக இருந்ததால் இந்திய பந்து வீச்சாளர்கள் திணறினார்கள். வேகப்பந்து வீச்சாளர் ஆர். பி. சிங்கால் ஒரு விக்கெற் கூட எடுக்கமுடியாமல் போனது. இஷாந்த் சர்மா இருந்தால் அவரது பந்து வீச்சு எடுபட்டு இருக்கும்.

இந்த நிலையில் தென்னாபிரிக்காவுக்கு எதிரான 2ஆவது டெஸ்டில் விளையாடுவேன் என்று இஷாந்த் சர்மா கூறியுள்ளார். தனியார் தொலைக்காட்சி ஒன்றிற்கு அளித்த பேட்டியில் அவர் கூறியதாவது,

உடல் தகுதி காரணமாக முதல் டெஸ்டில் ஆடவில்லை. எப்போதுமே உடல் தகுதியுடன் இருப்பேன் என்று சொல்ல இயலாது. இது எனது கையில் இல்லை. கடந்த 2 தினங்களாக நான் பந்து வீசி வருகிறேன். பந்து வீச்சில் நேர்த்தி இருக்கிறது. 2ஆவது டெஸ்டில் விளையாட உடல் தகுதி பெற்றுவிட் டேன். இது குறித்து அணித்தலைவர் கும்ளேக்கு, எஸ்.எம்.எஸ்.மூலம் தகவல் அனுப்பி விட்டேன்.

இவ்வாறு இஷாந்த்சர்மா கூறியுள்ளார். 2ஆவது டெஸ்ட் எதிர்வரும் 3ஆம் திகதி அகமதாபாத்தில் ஆரம்பமாகவிருக்கிறது. (5)

# தமிழகத்தில் ஒலிக்கும் குரல்களும் சர்வதேச அரசியல் யதார்த்தங்களும்



ஈழத்தமிழர்கள் பற்றிய பிரச்சினைகள் பற்றி மீண்டும் இந்தியாவின் தமிழகத்தில் அதிகளவில் குரல் கொடுக்கப்படத் தொடங்கியிருக்கிறது. பழ நெடுமாறன் வை. கோபாலசாமி. திருமாவளவன். விஜயகாந்த் என்ற வரிசை விஜய ரி.ராஜேந்தர் வரையில் இப்போது நீண்டிருக்கிறது.

ஈழத் தமிழர்களுக்காக முழு நேரமாகக் குரல் கொடுப்பதற்காக தமிழக அரசியல் தமக்கு வழங்கப்பட்டிருந்த முக்கிய பதவி ஒன்றையே ராஜேந்தர் இராஜினாமாச் செய்திருப்பதாக தமிழ் இணையத்தளம்ஒன்று செய்திவெளியிட்டிருக்கிறது. ஈழத் தமிழர்கள் அதிக ளவில்அரசியல்இராணுவ மனிதாபிமான நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்திருக்கும் சூழ்நிலையில் தமிழகத்திலிருந்து எழும் இந்தக் குரல்கள் பலருக்கும் ஆறுதல் தரும் விடயமாகத்தான் தென்படுகிறது.

இலங்கை விடயத்தில் இந்தியா கடைப்பிடித்துவரும் அணுகுமுறை தொடர்பில் குறிப்பாக இலங்கை அரசாங்கத்துக்கு இராணுவ உதவிகள் வழங்கப்படுவது தொடர்பில் தமது கடுமையான அதிருப்தியை வெளியிட்ட விடுதலைப் புலிகள் தமிழக மக்கள் இந்திய மத்திய அரசாங்கத்துக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருக்கும் சூழ்நிலையில் தமிழகத்தின் அரசியல் கட்சி தலைவர்கள் மத்தியில் இவ்வாறான குரல்கள் அதிகளவில் கேட்கத் தொடங்கியிருக்கிறது. இவ்வாறு ஈழத் தமிழர் விவகாரத்தில் தமிழகத்தின் ஆதரவு தொடர்பான நம்பிக்கை இப்போது இங்கே அதிகரித்து வருவதைக் காணமுடிகிறது.

சில மாதங்களுக்கு முன்னர் இலங்கையில் வெளியாகும் தமிழ் பத்திரிகையொன்றில் ஈழத்தமிழர்களின் சர்வதேச ஆதரவு செயற்பாடுகளுக்கான திறவுகோள் தமிழகத்தில் தான் இருக்கிறது என்று ஒரு ஆய்வாளர் தனது கட்டுரையில் தெரிவித்தார். பரந்த மக்கள் எழுச்சி பாரம்பரியம் கொண்ட தமிழகத்தின் எழுச்சி இந்திய மத்திய அரசின் மீது அழுத்தங்களை கொடுக்கும் என்றும் இதன்மூலம் மத்திய அரசின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படும் என்றும் இது சர்வதேச சமூகத்தை நோக்கிய ஈழத் தமிழர் அரசியல் காய் நகர்த்தலில் ஒரு சாதனையாக அமையும் என்றும் அந்த ஆய்வாளர் எதிர்வு கூறியிருந்தார்.

### தமிழகத்தில் ஒலிக்கும் குரல்களின் வலிமை என்ன ?

ஆனாலும் தமிழகத்தின் இந்த குரல்களின் வலிமை என்ன? தமிழகத்தின் இந்த உதிரி அரசியல் தலைமைகளின் குரல்கள் பரந்துபட்ட மக்கள் ஆதரவுக் தளத்தை கொண்டிருக்கிறதா? அப்படியே அது வளர்த்தெடுக்கப்பட்டாலும் இது இந்திய மத்திய அரசின் வெளியுறவுக் கொள்கையில் எத்தகைய தாக்கமான விளைவுகளை ஏற்படுத்தப் போகிறது என்ற யாதார்த்தங்கள் தொடர்பாக விரிவாக ஆராயாமல் தமிழக எழுச்சி தொடர்பான எதிர்பார்ப்புக்களை வளர்ப்பது ஆபத்தானதாகவே அமையும்.

அண்மையில் இந்தியாவில் இருந்து வந்த நண்பர் ஒருவரிடம் ஈழத்தமிழர்கள் தொடர்பான தமிழக மக்களின் உணர்வலைகள் எப்படி இருக்கிறது என்று கேட்டேன். தமிழக மக்களுக்கு இப்போது ஈழத் தமிழர்கள் பற்றிச் சிந்திக்க எங்கே நேரம் இருக்கிறது. எல்லோருமே இந்த அவசர பொருளாதார உலகில் ஓடிக்கொண்டிருக்கிறார்கள் என்பது தான் அவரது பதிலாகஇருந்தது.

"அப்படியானால் அங்கே அடிக்கடி ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக பாரிய ஆர்ப்பாட்டங்கள் நடக்கிறதே?" இது நான்.

பாரிய ஆர்ப்பாட்டங்களாக என்று ஏளனமாக என்னைப் பார்த்த அவர் ஈழத்தமிழர்கள் நடாத்தும் ஊடகங்கள் தான் அவற்றுக்கு இந்த அளவு முக்கியத்துவம்கொடுத்து பெருப்பித்துக் கூறுகிறதே தவிர அந்த அளவுக்கு அங்கே ஒன்றும் பெரிய எழுச்சி ஏற்படவில்லை .

இவர் சொன்ன இந்த கருத்தை இந்தியாவில் வசிக்கும் என்நண்பர்கள் பலரும் ஆமோதிக்கவே செய்கிறார்கள்.வெளியே இருந்து தமிழ் ஊடகங்கள் வாயிலாக நாம் பார்க்கும் அளவுக்கு 'அங்கே ஒன்றும் பெரிய எழுச்சி ஏற்படவில்லை என்பதே அவர்களுடைய வாதமாக இருக்கிறது.



அது சரி எழுச்சி ஏன் ஏற்பட வேண்டும்? ஏற்படுவதற்கான தாக்கநியாயம்தான் என்ன? தமிழக மீனவர்கள் கடலில் சுட்டுக்கொல்லப் படுவது தொடர்பாகவே பெரிய எழுச்சிகள் ஏற்படாத சூழ்நிலையில் ஈழத் தமிழர்களுக்காக எழுச்சி ஏற்படும் என்று எதிர்பார்ப்பதில் என்ன தாக்கம் இருக்கிறது.?

சில தமிழக அரசியல் தலைமைகள் நடாத்தும் எழுச்சிகளை பூதக் கண்ணாடி கொண்டு பார்த்து மயங்குவதற்கு தமிழக மக்கள் பொறுப்பாகமாட்டார்கள். இந்த அரசியல் தலைமைகளை பொறுத்தவரையில் இவர்கள் பெரும் மக்கள் திரள் ஆதரவைக் கொண்டவர்கள் என்று கூறிவிட முடியாது. ஈழத் தமிழர்கள் தொடர்பான இவர்களது உணர்வுகளை நாம் கொச்சைப்படுத்தி விடக்கூடாது என்றாலும் இவர்கள் அரசியல்வாதிளே என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. தமிழகத்தின் அரசியல் அரங்கில் பலமான இடம் எதனையும் பெற்றுவிட முடியாத இந்த தலைமைகள் தமிழக ஆட்சியாளர்களுக்கு எதிரான தமது கிளர்ச்சிக்கு ஈழத்தமிழர் பிரச்சினையையும் ஒரு பிரதான பேசு பொருளாக எடுத்துக்கொண்டுள்ளன என்று கருதுவதும் மிகையல்ல .இந்த உதிரிப் புரட்சிகள் தமிழக ஆட்சியாளர்களையே ஆட்ட முடியாத நிலையில் இதனால் இந்திய மத்திய அரசின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டு விடும் என்று எதிர்பார்ப்பது சற்று மிகையான ஆசையே.

### மத்திய அரசின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படுமா ?

இந்திய மத்திய அரசைப் பொறுத்தவரையில் அது பலமான ஒருஅரசியல் தலைமையின் கீழ் பெரும் பொருளாதார வல்லரசாக வளர்ச்சியடைந்து கொண்டிருக்கிறது.

இந்தியாவின் பிரதமராக வந்துவிடக் கூடாது என்று கடும் எதிர்ப்பு காட்டப்பட்ட முன் னர்ள் இத்தாலிய பிரஜையான சோனியா காந்தி மிக நீண்ட வரலாற்று பாரம்பரியம் கொண்ட காங்கிரஸ் கட்சியின் தலைவராக பத்தாண்டுகள் பதவி வகித்த ஒரே நபர் என்ற பெருமையைத் தட்டிக்கொண்டு பொருளா தாரத் துறைக் கலாநிதியான மன்மோகன் சிங்கை பிரதமராக நியமித்து இந்தியாவை வழிநடத்தி கொண்டிருக்கிறார். இந்த இரண்டு இணைந்த தலைமைகளின் கீழ் தெற்காசியா வின் பொருளாதார வல்லரசாக் எழுச்சி கண்டிருக்கும் இந்தியா உலக வல்லரசு என்ற நிலை யை நோக்கி வேகமாக முன்னேறிக் கொண்டி ருக்கிறது.

அதனுடைய இந்த வளர்ச்சிப் போக்கில் முன்னெப்போதும் இருந்திருக்காத அளவிற்கு மாநிலங்களின் கைகளும் இணைக்கப்பட்டிருக்கிறது.பல மாநிலக் கட்சிகளின் பிரதிநிதிகளையும்இணைத்துக்கொண்டு காங்கிரஸ் தலைமையில் தேசிய முற்போக்கு முன்னணி இந்தியாவை இந்தளவு வளர்ச்சிக்கு இட்டுச் சென்று கொண்டிருக்கிறது. மத்திய அரசோடு இவ்வாறு இணைந்து கொண்டுள்ள மாநிலக் கட்சிகளின் தமிழகத்தின் திராவிட முன்னேற்றக் கழகம் பிரதானகட்சியாக விளங்குகிறது.

மத்திய அரசில் அதிகளவு உறுப்பினர்களைக் கொண்டிருக்கும் தி.மு.க. மாநில ஆட்சியையும் கைப்பற்றி பலம் பொருந்திய ஒரு நிலையில் இன்று இருக்கிறது .ஆனால் அவ் வாறு திராவிட முன்னேற்றக் கழகம் பலம் பொருந்திய நிலையில் இருப்பதால் ஈழத் தமிழர்களுக்கு ஏதோ நன்மை ஏற்பட்டு விடப் போகிறது என்று எதிர்பார்ப்பதில் அர்த்த மில்லை.

தி.மு.க மத்திய அரசிலும் பல்த்துடன் இருக்கிறது என்பதால் அது மத்திய அரசின் நிலைப்பாடுகளில் செல்வாக்கு செலுத்தும் என்பதை விட மத்திய அரசின் ஒரு அங்கம் என்ற வகையில் பரந்த இந்தியாவின் நலம் சார்ந்த அக்கறையும் பொறுப்புணர்ச்சியுமே அதற்கு அதிகரித்திருக்கிறது எனலாம். இதுவே யதார்த்தமும் கூட. இதனால் தி.மு.க.வின் மாநில அரசியல் கொள்கைகள் மத்தியில் பிரதிபலிப்பதை விட , மத்திய அரசின் பரந்து பட்ட இந்திய நலன்சார்ந்தகொள்கைகள் மாநில அரசில் பிரதிபலிப்பதையே நாம் நேரில் கண்டு கொண்டிருக்கிறோம். தமிழகமீனவர்கள் விவகாரத்தில் தி.மு.க.வின் நடவடிக்கைகள் இதற்கு ஒரு நல்ல உதாரணம்.



இவ்வாறு மாநிலத்தில் பலம் பொருந்திய ஒரு கட்சியே மத்தியின் கொள்கையில் செல்வாக்கு செலுத்தாமல் இருக்கும் ஒரு சூழ்நிலையில் தமிழகத்தின் உதிரிக் கட்சிகளின் ஆர்ப்பாட்டங்கள் மத்திய அரசிற்கு அழுத்தம் கொடுத்து விடும் என்று எதிர்பார்ப்பது தர்க்கமுரணாகவே தென்படுகிறது.

இலங்கை தொடர்பான இந்தியாவின் நிலைப்பாடு என்பது இந்து சமுத்திர பிராந்தியத்தில் இந்தியாவின் பொரு ளாதார மற்றும் பாதுகாப்பு நலன்கள் சார்ந்த வெளியுலகுக் கொள்கையின் ஒரு பகுதியாக இருக்கும் போது தமிழ் நாட்டு அழுத்தங்க ளால் இதில் மாற்றம் ஏற்பட்டு விடும் என்று எதிர்பார்க்க முடியாது .

### நடைமுறைச் சாத்தியமான அணுகுமுறை

மேலும் தமிழ் நாட்டின் இந்த அரசியல் எழுச்சிகள் உதிரிக் கட்சிகளின் தனித்தனியான முயற்சிகளாகவே இருக்கின்றன என்பதையும் நாம் இங்கு கவனிக்க தவறக்கூடாது. ஒவ்வொரு கட்சியும் அதன் தல்லைமைகளுக்கு தமது கட்சி நலம்சார்ந்த நோக்கிலேயே ஈழத்தமிழர் வீவகாரத்தை கையிலெடுத்துக் கொண்டுள்ளன என்பதையே இது காட்டுகிறது. இதனால் தான் கொழும்பு தமிழர் பத்திரிகை யின் ஆசிரிய தலையங்கம் தமிழகத் தலைவர்களை ஈழத்தமிழர் விவகாரத்தில் ஒன்றுபடுமாறு கோரிக்கை விட நேர்ந்திருக்கிறது.

ஆனால் ஈழத் தமிழர் விவகாரத்தில் அதன் நேரடி பிரதிநிதிகளான ஈழத்தமிழர் அமைப்புகளும் கட்சிகளுமே ஒன்றுபடாத ஒரு சூழ்நிலையில் தமிழக தலைமைகள் இந்த விடயத்தில் ஒன்றுபட வேண்டும்என்று எந்த அடிப்படையில் கோரிக்கை விடுப்பது ?

உண்மையில் அதிகளவு சர்வதேச பரிமாணம் பெற்றுள்ள ஈழத்தமிழர் விவகாரத்தை வெறுமனே இலங்கையின் உள்நாட்டுக் கட்சி அரசியல் நிலைமைகள் மற்றும் தமிழக உதிரி அரசில் தலைமைகளின் செயற்பாடுகள் என்பவற்றின் அடிப்படையில்நோக்காமல் சர்வதேசஅரசியல்அண்டை நாடான இந்தியாவை முதன்மையாகக் கொண்ட சர்வதேச நாடுகளின் பிராந்திய அரசியல் இராணுவ பொருளாதார நலன்கள் போன்றவற்றின் கண்ணோட்டத்தில் நோக்கி இதற்குள் ஈழத்தமிழர்களுக்கு அதிகளவு சாதகமான ஒரு சூழ்நிலையைக் கட்டிஎழுப்புவதே நடைமுறைக்கு சாத்தியமான ஒரு அணுகுமுறையாக இருக்க முடியும். ⏭


ஸ்ரீ அம்மா பகவான் சரணம்



## ஸ்ரீ அம்மா பகவான் அறநெறி சத்சங்கம ஆரம்பவிழா

ஏகத்துவ யாழ். தலைமையகத்தினரால் கீழ்க்காணும் விலாசத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை (30.03.2008) காலை 10.00 மணி தொடக்கம் பகல் 2.00 மணி வரை பாதபூஜையும் வித்தியா பூஜையும் நடைபெறும்.

இதில் ஐஸ்வரிய பூஜை, ஆரோக்கிய பூஜை, குடும்ப சேம பூஜை, ஸ்ரீ அம்மா பகவான் பூஜை, வித்தியாபூஜை என்பவற்றுடன் ஆன்மீகதியான பயிற்சிகளும் தரப்படும். இதில் அனைத்து ஸ்ரீ அம்மா பகவான் பக்தர்களும் கலந்து கொண்டு ஆசியைப் பெற்று உய்யும் வண்ணம் கேட்டுக்கொள் கின்றனர்.

ஸ்ரீ அம்மா பகவான் இல்லம்,
கே.கே.எஸ்.வீதி,
6ஆம் கட்டை,
(H.N.B வங்கி அருகாமையில்)
சுன்னாகம்.

தொ.பே. 060 221 7476

(974)


## செயலாளரை , அரசியலமைப்புச் சபையே நியமிக்க வேண்டும்-லக்ஸ்மன் கிரியெல்ல

பாராளுமன்ற செயலாளர் நாயகம் ப்ரியானி விஜேசேகர எதிர்வரும் திங்கட் கிழமை ஓய்வு பெற்றதன் பின்னர் அரசாங்கத்துக்கு ஆதரவாகச் செயற்படும் ஒருவரை அப் பதவிக்கு நியமித்தால், ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்றத்தில் போரா ட்டத்தில் ஈடுபடப்போவதாக அக்கட்சியின் பாராளு மன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

புதியபாராளுமன்ற செயலாளரை அரசியலமைப்புச்சபையே நியமிக்க வேண்டு மெனவும், அவ்வாறு அல்லாது அரசாங்கம் தனக்கு சார்பான ஒருவரை நியமிக்குமாயின் தினமும் பாராளுமன்றத்தில் போராட்டத்தில் ஈடுபடுவோம் எனவும் அவர் தெரிவித் துள்ளார்.

அரசியல்அமைப்புச்சபையினால் அன்றி வேறெவராவது இந்த நியமனத்தை வழங்கினால் அது சட்ட ரீதியற்றதாக அமையும் எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்த விவகாரம் குறித்து ஏற்கனவே பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ப்ரியானி விஜேசேகரவின் ஓய்வுக்குப்பிறகு பாராளுமன்றத்தின் செயற்பாடுகள் ஸ்தம்பித நிலையை அடையக்கூடும் எனவும் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இதேவேளை, அரசியலமைப்புத் திருத்த ங்களை மேற்கொள்வது தொடர்பிலான அறிக்கை விரைவில் வெளியிடப்படும் என அரசியல் அமைப்பு த்திருத்தம்தொடர்பான பாராளுமன்றத் தெரிவிக்குழுவின் தலை வரும் அமைச்சருமான டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.

புதிய பாராளுமன்ற செயலாளர் நியமிக்கப்படும் வரை , பாராளுமன்ற விவகாரங்கள் பிரதிப்பாராளுமன்ற செயலாளர் நாயகத் தினால் நிர்வகிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், திங்கட்கிழமை முதல்பிரதி செயலாளர் நாயகம் பாராளுமன்ற விவகார ங்களை நிர் வகிப்பார் எனவும் , 17 ஆவது திருத்தச் சட்டத்தின்கீழ் புதிய நிரந்தர பாராளுமன்ற செயலாளர் நாயகத்தை நியமிக்கும் விடயத்தில் அனைத்து கட்சிகளும் ஒற்று மையுடன் செயற்பட வேண்டும்என வும் சபாநா யகர் டபிள்யூ. ஜே.எம் .லொக்கு பண்டார வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ-5)

இரும்பு பிடித்த கையும் சிரங்கு பிடித்த கையும் சும்மா இராது.

- தமிழ்ப் பழமொழி

வலம்புரி

# நாடு அழிந்து போவதாக ஜே.வி.பி. அழுகின்றது

நாட்டின் எதிர்காலம் குறித்து ஜே.வி.பியினர் அழுகின்றனர். ஆடு நனைகிறது என ஓநாய் அழுத கதையாக ஜே.வி.பியின் அழுகைக்கு பொருள் கொள்ளலாம்.

நாடு குறித்த ஜே.வி.பியின் அழுகை பொது நோக்குடையதல்ல. அந்தக் கட்சி தனது அரசியல் இருப்பை நிலைநிறுத்திக் கொள்வதற்காக நீலிக்கண்ணீர் வடிக்கின்றது.

நாட்டின் மீதும் பொதுமக்கள் மீதும் கரிசனை ஜே.வி.பிக்கு இருந்திருக்குமாயின்,யுத்த செலவை மையப்படுத்திய 2008ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்டத்தை ஜே.வி.பி. எதிர்த்து இருக்கும்.

மக்கள் நலனே ஜே.வி.பியின் மூச்சு என்பது போல காட்டிக் கொள்ளும் அதேநேரம், தனக்குச் சந்தர்ப்பவசமாகக் கிடைத்த நாடாளுமன்ற ஆசனங்களைத் தக்க வைத்துக் கொள்ளும் நோக்கில் வரவு–செலவுத் திட்டத்திற்கு எதிராக வாக்களிக்காமல் ஒதுங்கிக் கொண்டது.

நாடறிந்த, உலகறிந்த இந்தச் சம்பவத்தைச் செய்த ஜே.வி.பி. இப்போது இந்தியாவைக் கடுமையாகச் சாடுகின்றது. ஜே.வி.பியின் இச்சாடல் இந்தியாவுக்குத் தேவையானதென்பதை மறுப்பதற்கில்லை.

ஏனெனில் தமிழ்மக்களின் பிரச்சினைக்கு நிரந்தரமாக ஓர் தீர்வைக் காண முற்படாமல், இலங்கை அரசுடன் சேர்ந்து இந்திய மத்திய அரசு இலங்கைத் தமிழர்களுக்கு எதிராகச் செயற்படுகின்றது.

இவ்வாறு இந்தியாவின் செயற்பாடு அமைந்திருந்ததனால் மிகவும் பாதிக்கப்பட்டவர்கள் தமிழர்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. இலங்கை அரசுக்கு உதவி வரும் இந்தியாவை இப்போது ஜே.வி.பியும் எதிர்ப்பது உண்மைக்காகக் குரல் கொடுக்கத் தவறியதன் விளைவு என்ற முடிபுக்கு நாம் வருவதில் எந்தத் தவறும் இல்லை.

ஜே.வி.பியைப் பொறுத்தவரை இலங்கை தனித்துச் சிங்கள பௌத்தர்களுக்குரியதென்னும் இறுக்கமான கோட்பாட்டுடன் செயற்படுகின்றது.

இனப்பிரச்சினைக்கான தீர்வு யுத்தமாகவேயிருக்க முடியும் என்ற கத்தலே ஜே.வி.பியின் நோக்காக இருக்கின்றது. பல்லாயிரக்கணக்கான சிங்கள இளைஞர்களைக் கொன்றொழித்த ஜே.வி.பி. யுத்தத்தை ஆதரிப்பது குறித்து நாம் அதிகம் அலட்டிக்கொள்ளத் தேவையில்லை.

ஆனால் இந்தியா போன்ற நாடு, ஜே.வி.பி. போன்ற பேரினவாதக் கட்சிகள் ஆதரவு வழங்கி வரும் ஒரு அரசுக்கு துணையாகச் செயற்படுவதே வேதனை தருவதாகவுள்ளது.

எதுவாயினும் ஈழத்தமிழர்களுக்கு இந்தியா செய்த அநீதிக்கான பின்விளைவை இலங்கை அரசிடமிருந்தே அந்நாடு அனுபவித்துக் கொள்ளும். அப்போதுதான் அந்த நாடு தான் விட்ட தவறை உணர்ந்து கொள்ளும்.

இந்தியா தனது தவறை உணர்ந்து கொள்ளும்போது ஈழத் தமிழர்களின் நிலைப்பாடுகள் வேறு விதமாக இருக்கும் என்பது இவ்விடத்தில் குறிப்பிடத்தக்க விடயமே.

# 'பிரபாகரன்' திரைப்பட இயக்குநர் சென்னையில் தாக்கப்படவில்லை

## பொலிஸ் அதிகாரிகள் தெரிவிப்பு

(சென்னை)

இலங்கை இயக்குநர் பீரிஸ் தாக்கப்பட்டாரா? என்று சர்ச்சை எழுந்துள்ளது. இலங்கையைச் சேர்ந்த இயக்குநர் பீரிஸ் "பிரபாகரன்" என்ற தலைப் பில் விடுதலைப்புலிகள் குறித்த படத்தை, இயக்கியுள்ளார். சிங்கள மொழியில் எடுக்கப்பட்ட இந்தப்படத்தைதமிழ்மொழி உட்பட தென்னிந்திய மொழிகளில் மொழிமாற்றம் செய்வதற்காக அதன் இயக்குநர் பீரிஸ் சென்னையில் உள்ள ஜெமினி கலர் லாப்புக்கு வந்திருந்தார்.

அச்சமயத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த வன்னியரசு, இயக்குநர் சீமான் சு.ப.வீரபாண்டியன் உள்ளிட்டோர் "பிரபாகரன்" படத்தைதமிழில் மொழிமாற்றம் செய்யும் பணியைத் தடுத்து நிறுத்தும்படி தெரிவித்தனர். இதையடுத்து இயக்குநர் பீரிஸ் அடங்கிய குழுவினர் சென்னையில் இருந்து கொழும்பு புறப்பட்டுச் சென்றனர்.

இந்நிலையில் தென்சென்னை மாவட்ட இளைஞர் காங்கிரஸின் முன்னாள் துணைத்தலைவர் சபீர் அலி, பொலிஸ்கமிஷனரிடம் வியாழக் கிழமை மனு ஒன்றைக் கொடுத்துள்ளார். அதில் "இலங்கையைச் சேர்ந்த இயக்குநர் பீரிஸை தாக்கிய விடுதலைச் சிறுத்தைகள் கட்சி செய்தித் தொடர்பாளர் வன்னியரசு, திராவிடர் இயக்கத் தமிழர் பேரவை தலைவர் சுப.வீரபாண்டியன், இயக்குநர் சீமான் மீது பொலிஸ் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையெனில் மார்ச் 29ஆம் திகதி கமிஷனர் அலுவலகம் முன்பு உண்ணா விரதப் போராட்டம்நடத்தப்படும்" என்று குறிப்பிட்டுள்ளார். இது பற்றி விடுதலைச் சிறுத்தைகள கட்சியின் செய்தித்செய்தித் தொடர்பாளர் வன்னியரசு கூறிய தாவது,

தமிழினம் மற்றும் தமிழருக்கு எதிராக இந்தப்படம் எடுக்கப்பட்டுள்ளது. இந்தப் படம் திரையிட ஏற்றது அல்ல. தமிழகத்தில் திரையிடக்கூடாது பிரபாகரன் சிங்களப் படத்தை ஜெமினி கலர் லாப்பில் தமிழில் பிரதிகள் எடுக்க இருந்தநிலையில் தடுத்து நிறுத்தினோம். ஆனால் குறிப்பிட்ட இயக்குநர் பீரிஸை யாரும் தாக்கவில்லை என்றார்.

இந்தப்படம் பாண்டி பஜாரில்உள்ள எம்.எம்.தியேட்டரில்வியாழக்கிழமை திரையிடப்பட்டது. விடுதலைச் சிறுத்தைகள் கட்சி தலைவர் தொல்திருமாவளவன் திரைப்படத் தயாரிப்பாளர் சங்கத் தலைவர் ராம நாராயணன், நடிகர் சத்யராஜ், இயக்குநர்கள் சீமான், தங்கர்பச்சான் மற்றும் பாமக நிர்வாகிகள் பார்த்தனர். பின்னர் தொல்திருமாவளவன் உள்ளிட்டோர் இந்தப் படம் திரையிடப்படு வதை ஏற்க முடியாது என்று திரைப்படத் தயாரிப்பாளர் சங்கத் தலைவரிடம் வலி யுறுத்தினர்.

இலங்கை இயக்குநர் பீரிஸ் தாக்கப்பட்டாரா என்பது பற்றி பொலிஸ் அதிகாரி களிடம் கேட்ட போது 'பிரபாகரன் சிங்களப் படத்தை தமிழில் பிரதிஎடுப்பதற்காக அதன் இயக்குநர் பீரிஸ்சென்னை வந்தார். அவர்களுடன் பொலிஸாரும் இருந்தனர். ஆனால் அவர் யாராலும் தாக்கப்படவில்லை. அவர் தாக்கப்பட்டிருந்தால் புகார் கொடுத்திருக்க வேண்டும். ஆனால் பீரிஸ் தரப்பில் இருந்து எந்தப் புகாரும்கொடுக்கவில்லை என்று தெரிவித்தார். (அ-5)

# காலஎல்லை நீடிக்கப்பட்டுள்ளது

2008ஆம் ஆண்டு க.பொ.த. (உயர்தர) பரீட்சைக்கு தோற்றும் வெளிவாரிப் பரீட்சார்த்திகள் பதிவு செய்வதற்கான கால எல்லை கடந்த ஆண்டு நவம்பர் மாதம் 30ஆம் திகதியுடன் முடிவடைந்துவிட்ட போதிலும் அக்கால எல்லை தற்பொழுது மார்ச் 31ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

குறித்த திகதிக்கு முன் பதிவினை மேற்கொள்ள முடியாத பரீட்சார்த்தி களின் கோரிக்கையையடுத்தே அக் கால எல்லை நீடிக்கப்பட்டுள்ளது. 2007 ஜூலை 30ஆம் திகதி வெளி யான பத்திரிகை விளம்பரத்தில் குறிப் பிடப்பட் டுள்ள அறிவுறுத்தல்களைப் பின்பற்று மாறு கல்வி அமைச்சு பரீட்சார்த்திகளைக் கேட்டுள்ளது. (அ)

# இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக நல்ல முடிவை முதல்வர் அறிவிக்க வேண்டும்

## பா.ம.க.தலைவர் இராமதாஸ் கோரிக்கை

(சென்னை)

'இலங்கை பிரச்சினையை தீர்க்க இதுதான் சரியான தருணம். தமிழக அரசு விழித்துக்கொள்ள வேண்டும்



உறக்கத்தைக் கலைக்க வேண்டும்.' என ராமதாஸ் கூறியுள்ளார்.

இலங்கை அரசைக் கண்டித்துமாபெரும் தொடர் முழக்க போராட்டம் சென்னை மெமொரியல்ஹோல் அருகே நேற்று முன்தினம் நடந்தது. இதில் பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் பேசியதாவது, சொந்த நாட்டு மக்களையே கொன்று குவிக்கும் இலங்கை இராணுவத்திற்கு ஆயுத உதவிகள் செய்வதை இந்திய அரசு நிறுத்த வேண்டும் என ஐதராபாத்தில் நடந்த கம்யூ. கட்சி மாநாட்டில் தீர்மானம் நிறை வேற்றப்பட்டுள்ளது.

இந்த நேரத்தில் தமிழக அரசு விழித்துக்கொள்ள வேண்டும். உறக்கத்தைக் கலைக்க வேண்டும். இலங்கை பிரச்சினையை தீர்க்க இதுதான் சரியான தருணம். கிடைத்த வாய்ப்பை நழுவ விடக்கூடாது. 10 ஆண்டுக்கு முன், 1998 ஜுனில் எனது தலைமையில் சுப்பிரமணியசாமி உள்ளிட்ட எம். பி.க்கள் வாஜ்பாயை சந்தித்து மனுக் கொடுத்தோம். அந்த மனுவில் இலங்கையில் தமிழர்கள் தொடர்ந்து அவதிப்பட்டு வருகின்றனர்.

அந்நாடு தொடர்பான வெளிநாட்டுக் கொள்கையை இந்திய அரசு மாற்ற வேண்டும். இலங்கையில் வாழும் தமிழர்கள் நலனை பாதுகாக்க முன்வர வேண்டும் என வலியுறுத்தினோம். அந்த மனுவில் முதலில் கையெழுத்திட்டவர் அ.தி.மு.க. பொதுச் செயலர் ஜெயலலிதா. இன்று என்ன மாற்றம் வந்தது. 'உங்கள் காலத்திலேயே இலங்கைப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டும்' என கருணாநிதிக்கு பல கடிதங்கள் எழுதியுள்ளேன்.

இது நல்ல தருணம், கருணாநிதி நழுவவிடக்கூடாது. இந்திய கம்யூனிஸ்டு கட்சி நிறைவேற்றியுள்ள தீர்மானத்தைப் போல தமிழக சட்ட சபையில் தீர்மானம் நிறைவேற்ற பா.ம.க.முனைப்போடுசெயல்படும். இலங்கை பிரச்சினையில் சுமூக தீர்வு காண குழுவை அமைக்க வேண்டும். இது தொடர்பாக விரைவில் நல்ல முடிவை முதல்வர் அறிவிக்கவேண்டும். இவ்வாறு ராமதாஸ் பேசினார். (அ-5)

ஓலைச் சுவடிகள் 04

# தெரிந்த கதையும் தெரியாத அர்த்தமும்

## நம்பிக்கைகளும் ஆசாரங்களும்

***காலையில் எழும்முன் பூமியைத் தொட்டு தலையில் வைப்பது ஏன்?***

தூக்கத்திலிருந்து விழித்ததும் படுக்கையில் இருந்து கைகளை மலரவிரித்து நிதிக்கும் கல்விக்கும் சக்திக்குமாக லெட்சுமி, சரஸ்வதி, பார்வதி என்ற தேவிமாருக்கு ஜெபங்களைக் கூறிய பின் கால்களை தரையில் வைக்கும் முன் பூமாதேவியைத் தொட்டு தலையில் வைத்துத் தியானிக்க வேண்டும் என்று ஆசாரியர்கள் போதித்துள்ளனர்.

சிலர் இதை மூட நம்பிக்கை என்று பரிகசித்து தள்ளுவது முண்டு. ஆனால் இதன் பின்னுள்ள அறிவியல் இரகசியத்தைக் கவனிப்போம். ஒரு நபர் தூங்கும்போது அவர் உடலில் தங்கியிருப்பது "சமநிலை விசை" அல்லது அழுத்தவிசை என்பப்படும். ஆனால் விழித்தெழும்பும் போது இயக்க விசை அதாவது சலன விசையாக மாறுகிறது.

விழித்தெழும் பொழுது கால் முதலாவது தரையில் தொட்டால் ஆற்றல் கீழ் நோக்கி ஒழுகி உடல் பலம் குறைகின்றது. ஆனால் கைமுதலாவது தரையைத் தொடும்போது ஆற்றல் மேல் நோக்கி பரவி கைவழியாக வெளியேறி உடல் பலம் இரட்டிக்கின்றது.

இவ்வளவு பெரிய ஒரு விஞ்ஞான இரகசியம் ஒளிந்து கிடப்பதால்தான் நம் நாட்டு ஆசாரியர்கள் விழித்தெழு முன் பூமியைத் தொட்டு தலையில் வைக்க வேண்டும் என்று பின் தலை முறைகளுக்கு கற்பித்துச் சென்றனர்.

# சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு...

புலிகளின் தற்கொலைப் படையில் சேர எண்ணம் கொண்டுள்ளவர்கள் தங்கள் மனதை மாற்றிக்கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் 118 என்று தொடங்கும் அரசாங்க தொலைபேசி இலக்கம் ஒன்றை அழைக்க வேண்டும் என்றும் அந்த சுவரொட்டி கூறுகிறது.

அப்படி மனதை மாற்றிக் கொள்பவர்களுக்கு உள்நாட்டிலோ வெளிநாட்டிலோ ஒரு புதிய வாழ்க்கையை ஆரம்பிக்க ஒருகோடி ரூபாய் ரொக்கப்பணம் வழங்கப்படும் என்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத் தொலைபேசி இலக்கம் இந்தச் சுவரொட்டியில் இடம்பெற்றிருந்தாலும் இப்படி ஒரு திட்டத்தை அரசு அறிவிக்கவில்லை.

இது ஏமாற்று வேலை என்று இராணுவம் கூறியது.

இந்தச் சுவரொட்டிகள் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருவதாகக் கூறிய இராணுவம் சார்பாகப் பேசவல்ல பிரிகேடியர் உதய நாணயக்கார அந்தச் சுவரொட்டியிலுள்ள தொலைபேசி எண்ணை தான் அழைத்தபோது பதிலே இல்லை என்றும் இது ஒரு ஏமாற்று வேலை என்று தான் சந்தேகிப்பதாகவும் தெரிவித்தார். (சு)

# சிங்களவர் இருவர்...

திருப்பதாகவும் அப்பகுதியில் தேடுதல் நடவடிக்கை ஒன்று இடம்பெற்றதாகவும் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்தார்.

காட்டுப்பகுதியால் வந்த நால்வரடங்கிய புலிகளின் குழு ஒன்றே நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் மண் அகழச் சென்றவர்கள் மீது தாக்குதல் நடத்தியிருப்பதாக படுகாயமடைந்தவர் தெரிவித்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

இத்தத் தாக்குதலில் படுகாயமடைந்த ஒருவர் அம்பாறை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ச-5)

# வவுனியாவில்...

படுகாயமடைந்தவர்களாவர்.

மோட்டார் சைக்களில் வந்த இருவரே இந்தக் கைக்குண்டை வீசிவிட்டு தப்பிச் சென்றதாக வவுனியாப் பொலிஸார் தெரிவித்திருக்கின்றனர்.

இச்சம்பவம் தொடர்பாக தொடர்ந்தும் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-5)

# கிழக்கில் அதிரடிப்படை...

வாக்குகளைக் கொள்ளையடிப்பதற்காகவே அங்கிருந்த சிறப்பு அதிரடிப் படையினரை அரசாங்கத் தரப்பு வேறு பகுதிகளை நோக்கி நகர்த்தியுள்ளது.

கடந்த முறை இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கிழக்கில் மகிந்த ராஜபக்ஷ கடுமையான பின்னடைவைச் சந்தித்திருந்தார். இனிவரும் தேர்தல்களிலும் இத்தகைய பின்னடைவுகள் ஏற்படாமல் இருப்பதற்கான சதித்திட்டத்தையே அவர் தற்போது மேற்கொண்டு வருகிறார்.

அதேபோல் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் பதவிக்கு 17-வது அரசியலமைப்பு சட்டத்திற்கு அமையவே நியமனம் வழங்கப்படவேண்டும். தற்போது நாடாளுமன்ற செயலாளர் நாயகமாக உள்ள சிறியானி விஜயசேகரவின் பதவிக்காலம் முடிபடைவதால் அந்தப் பதவிக்கு அரசாங்கம் தனது ஆதரவாளர் ஒருவரை நியமிக்க முனைகிறது.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனது விசுவாசி ஒருவரையே இந்தப் பதவிக்கு நியமிக்க முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார். இந்த முயற்சி வெற்றியளித்தால் நாடாளுமன்றில் ஒவ்வொருநாளும் அடிதடி சண்டைதான் நடக்கும்.

தற்போது நடைமுறையில் இருக்கும் அரசியலமைப்பை சீர்குலைக்கும் வகையில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ திட்டமிட்டுச் செயற்படுகிறார். முன்னர் சந்திரிகாவும் இவ்வாறு செயற்பட்டார். எனினும் அப்போது எழுந்த எதிர்ப்பால் அந்த முயற்சியை சந்திரிகா கைவிட்டார் என்றார்.

இதேவேளை நாடாளுமன்ற செயலாளர் நாயகம் பதவிக்கானநியமனம்முறைப்படி நடக்கவேண்டும் என்று சபாநாயகர் லொக்குபண்டாரவுக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கடிதம் ஒன்றை அனுப்பியிருக்கிறார். (ச-5)

# சர்வதேச நாடுகளின் மிரட்டல்...

மனித் உரிமை மீறல்களை காரணம் காட்டி இந்த ஒப்பந்தத்தை இலங்கையுடன் தொடர்ந்தும் நீடிக்க வேண்டாமென ஐரோப்பிய ஒன்றியத்திடம் சில அமைப்புக்கள் கோரியுள்ளன.

மனித உரிமைகள் தொடர்பாக சர்வதேச ரீதியில் மேற்கொள்ளப்படும் இத்தகைய பிரசாரங்களால் இலங்கையிலுள்ள இலட்சக்கணக்கான மக்கள் தான் தமது ஜீவனோபாயத்தை இழந்து பாதிக்கப்படுவர்.

அதேநேரம் இத்தகைய பிரசாரங்களால் இலங்கை தொடர்பாக ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் தப்பான அபிப்பிராயத்தை கொள்ள முனைகின்றன.

அத்துடன் மனித உரிமைகளை மதிக்கவில்லை என்ற குற்றச்சாட்டை இலங்கை மீது சுமத்துவதீற்கு ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் முனைந்து வருகின்றன. இதனால் பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் இலங்கை சிக்கலாம்.

குறிப்பாக முன்னுரிமை அடிப்படையில் இலங்கையிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் உற்பத்திப் பொருட்களை இனிமேல் ஏற்றுமதி செய்ய முடியாமல் போகலாம். கடந்த வருடம் 3ஆயிரத்து 800 மில்லியன் டொலர் வருமானம் இத்தகைய ஏற்றுமதியால் கிடைத்தன.

ஐரோப்பிய ஒன்றியத்தால் சுமத்தப்படும் மனித உரிமை குற்றச்சாட்டுக்களில் உண்மையில்லை.

இந்தக் குற்றச்சாட்டுக்களின் பிரகாரம் சலுகை அடிப்படையிலான வர்த்தகத்தை ஐரோப்பிய ஒன்றியம் நிறுத்தினால் அதனால் கிராமப்புறங்களில் வாழும் 30 இலட்சம் மக்கள் தான் பாதிக்கப்படுவர்.

ஐரோப்பிய ஒன்றியம் ஒப்பந்தத்தை தொடர மறுத்தால் ஏற்படவிருக்கும் விளைவுகள் பாரதூரமானவையாகும். எனவே அரசாங்கம் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் குறித்த விடயத்தில் தீர்க்கமான முடிபு எடுத்திருக்கிறது.

எதிர்காலத்தில் சர்வதேச நாடுகள் இலங்கையிடம் இத்தகைய குற்றச்சாட்டுக்களை மேற்கொள்ள முடியாத வகையில் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் குறித்து நடவடிக்கை எடுக்க அரசாங்கம் முன்வந்திருக்கிறது.

எதிர்காலத்தில் மனித உரிமை மீறல்கள் குறித்து இலங்கை மீது சர்வதேச நாடுகள் குற்றச்சாட்டுக்களை சுமத்த முடியாத வகையில் சில தீர்மானங்களை கடந்த இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ எடுத்திருக்கிறார்.

சர்வதேச கொள்கைகளையும் அந்த நாடுகளின் வற்புறுத்தல்களையும் இலங்கையில் நடைமுறைப் படுத்துவதற்கு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தயாராகவில்லை. அத்தகைய குற்றச்சாட்டுக்கள் குறித்து உயர் நீதிமன்றம் இனிமேல் நடவடிக்கை எடுக்கும்.

அதில் சர்வதேச நாடுகள் தலையிட முடியாது என்றார். (ச-5)


## கண்ணீர் அஞ்சலி

மண்டைதீவு வேப்பந்திடல் ஸ்ரீமுத்துமாரி அம்பாள் ஆலய பரிபாலன சபைத் தலைவரும் சிறந்த சமூக சேவையாளரும். பிரபல புகையிலை வர்த்தகருமான மண்டைதீவு 2ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த

**அமரர் சின்னத்தம்பு வைரவநாதன்**
அவர்கள்

27.03.2008 அன்று தமிழ்நாடு சென்னையில் காலமாகிய செய்தி எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்துகின்றது. அன்னாரது மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

அவரது பிரிவால் துயரும் குடும்பத்தார், சுற்றத்தார் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டு, அவரது ஆத்மா அன்னையவளின் பாதாரவிந்தங்களில் நித்தியப் பேறடைய. பிரார்த்திக்கின்றோம்.

இவ்வண்ணம்,
பரிபாலன் சபையினர்,
ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயம்,
மண்டைதீவு.

(930)



## மாவட்ட ரீதியிலான பரீட்சை

வெற்றித்தேர்வு திருமலை கணேசலிங்கம் அவர்களின்

2008 தரம் : 4 வெற்றித்தேர்வு- 1
2008 தரம் : 5 வெற்றித்தேர்வு- 11

ஞாயிறு: 30.3.2008. 6am, 8am, 10am, 2pm, 4pm

நல்லூர் சயன்ஸ் அக்கடமி
நல்லூர் முருகன் கோயில் முன்பாக

வெளிமாணவர்கள் எவரும் பரீட்சை எழுதலாம்.
பெறுமதியான பரிசுகள் காத்திருக்கின்றன.

T.P.9016

தரம்: 4 வெற்றித்தேர்வு- 1. தரம்: 5 வெற்றித்தேர்வு-11
செவ்வாய் சகல புத்தகசாலைகளிலும் பெறலாம்.



## சித்திரை புதுவருடத்தை முன்னிட்டு

Sale ! Sale ! மாபெரும் மலிவு விற்பனை ! Sale ! Sale !

(25.3.2008 முதல் - 14.4.2008 வரை)

அனைத்துப் புடைவைகளுக்கும் கழிவு வழங்கப்படும். ரெடிமேட் ஆடைகளுக்கு விசேட கழிவு விலையில் வழங்கப்படும்.

புதுவருடத்தை முன்னிட்டு எதிர்வரும் சனி, ஞாயிறு விடுமுறை தினங்களிலும் திறந்திருக்கும்.

இன்றே விரையுங்கள்...

லைடன் புடைவை நிலையம்

410, ஆஸ்பத்திரி வீதி (பஸ்நிலையம் முன்பாக), யாழ்ப்பாணம்.

(சி-934)



## யாழ். நகரில் புதியதோர் உதயம்

புதுக்கடைத் திறப்பு விழா அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான சர்வசித்து வருடம் பங்குனி மாதம் 16ஆம் நாள் (29.03.2008) சனிக்கிழமை முற்பகல் 10.45 மணிமுதல் 11.15 மணிவரையுள்ள சுப முகூர்த்த வேளையில் எம்மால் புதிதாகத் திறக்கப்படவுள்ள

சிற்றிசன் போய்ஸ் செலக்ஷன் அன் ரெயிலறிங்

ஸ்தாபனம் இறைவன் திருவருள் துணை கொண்டு ஆரம்பிக்கப்பட இருப்பதால் அத்தருணம் அன்பர்கள், நண்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரும் வருகை தந்து நிகழ்வைச் சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்

இல. 01, பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்.

இங்ஙனம்,
தங்கள் நல்வரவை நாடும்,
செ.டயேந்திரா (டயன்)

(சி-927)



## PCS புதுவருடத்தை முன்னிட்டு PCS

மிகக் குறைந்த விலைகளில் கணனிகள்

53000/=
Intel 1.8 GHz Dual Core Processor
Foxconn 945 Intel Chipset Mother Board
1 GB DDR II Kingston RAM
160 GB Sata Hard Disk
DVD Writer
ATX Casing
Multimedia Keyboard
Optical Mouse
15" Monitor
650 VA Power Tree UPS

51000/=
Intel 3.0 GHz 2M Processor
Foxconn 945 Intel Chipset Mother Board
512 MB DDR II Kingston RAM
80 GB Sata Hard Disk
Combo Drive
ATX Casing
Multimedia Keyboard
Optical Mouse
15" Monitor
650 VA Power Tree UPS

38000/=
Celeron 1.6 GHz Dual Core Processor
Foxconn 945 Intel Chipset Mother Board
512MB DDR II Kingston RAM
80 GB Sata Hard Disk
ATX Casing
Multimedia Keyboard
Optical Mouse
15" Monitor

69000/=
Intel 2.2 GHz Core 2 Duo Processor
Foxconn 945 Intel Chipset Mother Board
1 GB DDR II Kingston RAM
160 GB Sata Hard Disk
DVD Writer
ATX Casing
Multimedia Keyboard
Optical Mouse
15" Monitor
650 VA Power Tree UPS

PC SOLUTIONS
Our Strength is Your Satisfaction

PC SOLUTIONS
527/1, Navalar Road, Jaffna.
(TCT Super Market - Upstair)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 29.03.2008 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.